# மன்மத மருந்து

## புஷ்பா தங்கதுரை

## 1

பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு அந்தக் குரலைக் கேட்டதும், நவீனின் தொண்டை இறுகியது. அந்தக் குரலை கிட்டத்தட்ட மறந்துவிட்டான் என்று சொல்ல முடியாது.

மூளையில் ஓரமாக அது கலைந்துகொண்டிருந்தது.

அதை அவன் பொருட்படுத்தியதில்லை. அவ்வளவுதான்.

சட்டென்று நவீன் தனது குரலை மாற்றிக்கொண்டான்.

"ஸாரி ஸார், மிஸ்டர் நவீன் வெளியே போயிருக்கார்."

"எப்போ வருவார்?"

அந்தக் கரகரப்புக் குரல் மெதுவான தோரணையில் கேட்டது.

"அரை மணியிலே வந்துடலாம்."

டக்...

போன் அறுந்தது.

அரை விநாடியில் நவீன் உடம்பில் ஒரு 'குப்' வியர்வை.

டவலை எடுத்து வழித்தான்.

"பில்!" என்று ரீடா ஒரு தாளை நீட்டி...ள.

அதன் எண்களைப் பார்க்க முடியவில்லை.

கண்கள் மழுங்கின.

ரீடாவின் வழக்கமான வியாபாரப் புன்னகை தற்சமயம் ரசிக்கு வில்லை.

"பில்!" என்றாள் ரீடா இரண்டாம் முறை.

"ப்ளு..." என்ற அந்தப் பெரிய கடற்கரை ரெஸ்ட்டாரண்டில் அப்போது கறுகறுப்பான முன் இரவு வேளை.

மெல்லியதாக அழிந்துகொண்டு ஹாலின் அரவம் அந்த முன்



அறைக்கு அடிக்கடி வழுவிக்கொண்டிருந்தது.

"ரீடா! கவுண்டரைப் பார்த்துக்க! இதோ வரேன்!"

நாற்காலியில் இடை வழியே நழுவி, பின்புறத்து சேம்பரில் நுழைந்தான். மெத்தையில் சொகுசாக உட்கார்ந்தான்.

மனசு கொந்தளித்தது.

இரண்டுவிதத்தில் மனம் வலித்தது.

ஒன்று தன் குரலை மாற்றி தன் நண்பன் சூரியை ஏமாற்றியதற்காக! எவ்வளவு பெரிய தவறு?

இன்று இந்த அளவு சொகுசும், வசதியுமாக வாழ்வதற்கு அந்த நண்பன்தானே காரணம்!

சிறையில் இருந்துவிட்டு, பத்து வருடம் கழித்து அந்த நண்பன் வந்திருக்கிறான் என்பதற்காக,

தன் குரலை மாற்றிப் பேசி அவனை ஏமாற்றலாமா?

நண்பன் சூரியும் லேசுப்பட்டவனா?

நிச்சயம் நவீனின் குரலை அவன் கண்டிபிடித்திருப்பான்!

அதைப்பற்றி பின்னால் சந்தித்தால் கேட்கவும் செய்வான்.

அப்போது என்ன பதில் சொல்லுவது?

அது ஒரு வலி, மனத்தில்.

இரண்டாவது வலி என்ன?

இந்த ஆயுள் தண்டனைக்காரனை எப்படி பத்து வருடத்தில் வெளியே விட்டார்கள்?

எதிர்பார்க்கவே இல்லையே?

விடுதலையான சூரி இப்போது வந்து, நீ சம்பாதித்துள்ள சொத்தில் பாதியைக் கொடு, எல்லாம் என்னால் வந்ததுதான் என்று கேட்டால் என்ன சொல்வது?

இதில் ஏதாவது தகராறு வந்து, நவீனின் பழைய சரித்திரங்கள் வெளியானால்...

நவீன் இப்போது கண்ணியமுடன் வாழும் வாழ்க்கை சின்னா பின்னமாக உடைந்துவிட்டால்...

இது இரண்டாவது வலி!

## 2

போன் மணி டிர்ர்ங்கியது.

அறை முழுதும் அதிர்ச்சி.

திடுக்கிட்டு நவீன் கண்களை விழித்தான்.

போன் பக்கம் கையை நீட்டினான.

எடுப்பதற்குள் அது அணைந்தது.

இருந்தாலும் எடுத்தான்.

ரீடா பேசினாள்!

"ஸார் 'கால்' வந்தது. 'கட்' ஆயிடுச்சு" என்றாள்.

"யார் தெரிஞ்சுதா?"

"தெரியலை ஸார்! கனத்த குரலா தெரிஞ்சுது."

"என்ன சொன்னான்?"

"நவீன் இருக்கானான்னு ஒருமையிலே கேட்டார்."

நவீன் அரைக் கணம் யோசித்தான். சூரிதான் பேசியிருக்கிறான்.

"சரி ரீடா. இனிமே வர்ற 'காலை' நான் எடுக்கிறேன்" என்றான்.

அடுத்த பத்தாவது விநாடி மீண்டும் போன் மணி!

ஒரு அவசர மூச்சுடன் எடுத்தான்.

"ஹலோ!"

"என்னடா நவீன்! எங்கே மறைஞ்சிருந்தே?"

அதே குரல்! சாகசக் குரல்! அட்டகாசக் குரல்! சூரியின் ஏற்ற இறக்கக் தூரலை நவீன் கண்டுபிடித்துவிட்டான்.

"ஆ! சூரியா? தினமும் உன்னைத்தான் நினைச்சிட்டிருந்தேன்!" என்று சொன்னபோது,

மனசில் வேறு என்னென்ன சொல்லலாம் என்று நினைவுகள் வேகமாக ஓடின.

"அப்படியா! நினைச்சிட்டிருந்தேன்னு சொன்னதே ரொயப சந்தோஷம். இன்னும் பத்து வருடத்துக்கு வெளியே வரமாட்டான்னு நினைச்சிருப்பே! வந்துட்டேன் பார்த்தியா!"

ஆ... ஆ... ஆ...

சூரியின் சிரிப்பு அதிர்ச்சி அலையாக எழுந்தது.

நவீனுக்கு சுருக் என்று மனதில் முள் ஏறியது.

அந்தப் பழைய நாளைய குரல், சூரியின் அதே குரல்.

அதை நினைத்ததும், அந்தப் பழைய வாழ்வை நினைத்ததும், மனசில் எத்தனை கசப்பு!

அதை நினைவுப்படுத்த சூரி திரும்ப வந்துவிட்டானே?

அவன் மூலம் திரும்பவும் அந்தப் பழைய தினங்கள் உதயமாகிவிடுமா?

அத்தனை நினைவுகளும் பறந்துவர,

குரலைக் குழைந்து அன்பாக்கி,

"எப்போ வந்தே?" என்றான் நவீன்.

"ஒழுங்கா வந்தாயா? ஜெயில்லேர்ந்து தப்பிச்சிட்டு வந்தாயான்னு



கேட்கலையே" என்றான் சூரி.

கேட்டுவிட்டு மீண்டும் 'ஆ... ஆ...' என்று அதிர்ச்சி சிரிப்பில் சிரித்தான் சூரி!

நல்லவேளை, போனிலே இந்தச் சிரிப்பை வைத்துக்கொண்டானே? நேரிலே இங்கே வந்து, நாலு பெரிய மனிதர்கள் முன்...

ஆமாம், இந்த சூரி ஆயுள் தண்டனை அடைந்தவன் ஆயிற்றே... எப்படி வெளியே வந்தான்...

"ஏதாவது பரோல்லே வந்திருப்பே" என்றான் நவீன்.

"அப்படித்தான் நினைச்சியா?"

"வேறே எப்படி நினைக்க முடியும் சூரி?"

"உள்ளே நான் போய் பத்து வருஷம் ஆச்சு! தெரியுமா?"

"தெரியும்! தினம் தினம் நினைப்பேன். கடவுளை வேண்டிக்கிடுவேன். வேறே என்னாலே என்ன செய்ய முடியும்... உன்னை ஜெயில்லே பார்க்க வந்தாகூட என்னைச் சந்தேகப்படுவாங்க! பிடிச்சுடுவாங்க! நம்ம எதிர்காலத் திட்டம் எல்லாம் பாழாய்போகும்! நீ போகும்போது சொல்லிட்டுப் போனியே! 'உன் விஷயமா நான் எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடாதுன்னு!"

"அது உண்மைதான்."

நவீனுக்கு கொஞ்சம் தைரியம் பிறந்தது.

"எப்போ வந்தே சூரி?"

"ஒரு மாசமாச்சு! பரோல்ல வறலை! விடுதலை ஆகி வந்திருக்கேன்!"

"விடுதலையா... அது எப்படி?"

"ஏதோ பெரிய மனுசரோட நூறாவது பிறந்த நாள் விழாவாமே! எங்களை விட்டுட்டாங்க!"

"அப்பா! என் மனசு நிறையுது, சூரி!"

"வந்து ஒரு மாசமாச்சு!"

"ஒரு மாசமாச்சா?"

"ஆமாம்."

"இத்தனை நாளும் பேசலையே."

"உறவுக்காரங்களை எல்லாம் நோட்டம்விடப் போயிருந்தேன். ஆமாம் நீ இப்போ பெரிய புள்ளியாமே! பணம் கொழிக்குதாமே!"

"அப்படி எல்லாம் இல்லே..."

"இழுக்காதே! பொய் சொல்ல ஆரம்பிச்சுட்டியா?"

"இல்லை சூரி! அங்கங்கே நுழைஞ்சா அவங்க அவங்க கஷ்டம் தெரியும்."

"இந்தா... சும்மா ஓட்டாதே, நவீன்!"

"ஓட்டல்லே! இப்போ நான் சம்பாதிச்சிருக்கிறதெல்லாம்

உன்னாலேதான்."

"கேட்டப்புறம் சப்பைக்கட்ட வர்றியா?"

"அப்படியில்லை. மெய்யாலுமே சொல்றேன், ஆண்டவன் சத்தியமா!"

"சரி! இன்னிக்கு ஒன்பது மணிக்கு 'முல்லை வில்லா'விலே சந்திக்கிறோம்.

"முல்லை வில்லாவா? எங்கே இருக்கு?"

"மகாபலிபுரம் தாண்டி... எடுப்பாத் தெரியும் விசாரிச்சுக்க!"

## 3

ரீடா உள்ளே வந்தாள்.

"ஸார்! மொத்தச் செலவை எண்ணிடவா!"

"எண்ணு! இன்னிக்கு நீதான் கணக்கை குளோஸ் செய்யணும்."

"ஓ! ரெடி ஸார்!"

திரும்பினான்.

ரீடா 30 இருப்பாள். நீலக் கண்களோடு. க்ரீம் நிறத்தில் மேனி! அங்கங்கு வனப்பான வளைவுகள்! திடமான மேற்புறங்கள்! வளைந்து வட்டமிடும் இடைப் பகுதிகள்.

24 மணி நேரம் அவள் மலர்ந்தவள்!

மணியைப் பார்த்தான் எட்டு!

"முல்லை வில்லா எங்கே?"

நகருக்கு வெளிப்புற விளிம்புகளில் தப்பு செய்வதற்கு என்றே எழுந்த பங்களாக்களில் அது ஒன்று.

## 4

முல்லை வில்லா இருட்டில் மூழ்கியிருந்தது.

இரண்டே இரண்டு சன்னல்களில் வடிகட்டிய மந்த வெளிச்சம்.

முன்புறம் பெரிய தோட்டம்!

தனியாக நடந்தான்!

பதினைந்து வருட நிம்மதி வாழ்வு அரை நொடியில் கரைந்து விடுமோ?

வீட்டின் நிலைமையை நினைத்தான். இரண்டு குழந்தைகளை நினைத்தான்.

அவனை நாலு பேர் முன்னால் கண்ணியமாக்கி, கனவானாக்கித் தினம் சோறு போடும் அந்த ரெஸ்டாரெண்டை நினைத்தான்.

ஒரு ஏளனம் மனதில் ஓடியது. இத்தனையும் பாவத்தில் எழுந்த கட்டுமானங்களா?

மணலில் இடப்பட்ட அஸ்திவாரங்களா?

நல்ல இருட்டு!

மெல்லிய கடலோசை!

மற்றப்படி நிசப்தம்!

முகப்பில் நின்றான்.

கதவு மூடியிருந்தது.

ஒரு கரும் இருட்டு போர்டிகோவில் பதிந்திருந்தது.

பங்களா வாசலில் முழு நிசப்தம்.

இன்னும் ஆள் இங்கே வரவில்லையா? சுற்றிப் பார்த்தான். இருபக்கமும் சவுக்குக் காடுகள் மணலை மூடியிருந்தன. நிர்மானுசம். அடித்துப் போட்டால் கேட்பார் கிடையாது.

முகப்பைத் திறக்கவில்லை. நடந்து வெளியே வந்தான். பங்களாவின் விலாப் பக்கம் மெதுவாக நடந்தான்.

அங்கேதான் வெளிச்ச சன்னல்கள் இருந்தன.

முதல் சன்னலைத் தட்டினான்.

கதவு திறக்கவில்லை.

இரண்டாவதையும் அணுகி தட்டினான்.

திறக்கவில்லை.

பின்னால் நடந்தான்.

பின்புறம் பங்களா இன்னும்

# தாய்மார்கள் கவனிக்க...!

குழந்தை பெற்றுக்கொண்ட அம்மணிகள் குழந்தையை காப்பது போல தங்கள் உடம்பையும் கவனித்துக்கொள்ள தவறக்கூடாது. சுவர் இருந்தால்தானே சித்திரம் வரைய முடியும்.

தாய்ப்பாலூட்டும் பெண்கள் தன் உடல் நலத்தை பாதுகாத்துக் கொள்ளவும், சிரமமின்றி தாய்ப் பாலைக் கொடுக்கவும் போதுமான ஊட்ட உணவு வகைகளை சாப்பிட



வேண்டும். அதாவது வழக்கமான உணவைவிட 30 சதவிகித உணவை கூடுதலாக சாப்பிட வேண்டும். தானியங்கள், பயறு வகைகள், முட்டை, பால், இறைச்சி, மீன், பசுமையான கீரைகள், காய்கறிகள், பழங்கள் போன்றவைகளை சாப்பாட்டில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

சிலர் இத்தகைய உணவு வகைகளை தொடாமல் நெய்யை அப்படியே குடிக்கிறார்கள். அது தவிர உலர்ந்துபோன பழங்களை சாப்பிடுகிறார்கள். இதனால் பெண்களின் உடம்புதான் பலூன் போல உப்புமே தவிர குழந்தைக்கு எந்தவித சத்தும் கிடைப்பதில்லை.

இருட்டாக இருந்தது.

இச் இச்சென்று இருள், எதுவும் தெரியவில்லை.

தடவிப் பார்த்தபோது, பின் கதவு திறந்திருப்பது தெரிந்தது.

ஒரு பெருமூச்சுவிட்டு உள்ளே நுழைந்தான்.

அரும்பு போல் வெளிச்சம் உள்ளே தெரிந்தது.

வழிகாட்டியது.

மெள்ள அடிகளை வைத்து உள்ளே போனான்.

ஹாலுக்கு வந்திருப்பான். எல்லாம் சூன்யம். இடது அறை மட்டும் வெளிச்சம்.

ஆவலுடன் சென்றான். பாதி திறந்த கதவை விலக்கினான்.

உள்ளே...

கண் சட்டென்று அந்தரத்தில் விழுந்துவிட்டது.

விட்டத்திலிருந்த கயிற்றில் தொங்குவது யார்?

சூரிதான்!

## 5

இரத்தம் அவன் வாயிலிருந்து வடிந்துகொண்டிருந்தது.

இப்போதுதான் இறந்திருப்பானோ?

கண்கள் பரபரத்தன. அங்குமிங்கும் பாய்ந்தான்.

அலமாரியில் பேனாக் கத்தி இருந்தது. நாற்காலிகளைப் போட்டு ஏறினான். கயிற்றை வெட்டிவிட்டான்.

"தொம்..." என்று சத்தம்.

கீழே குதித்து சூரியின் நாடியை பார்த்தான்.

அடங்கிவிட்டது.

உலகத்தில் இனி சூரி கிடையாது.

மனசில் திடீரென்று ஒரு பனி மறைந்து வெட்டவெளி.

நன்கு பார்த்தபோது அந்தக் காயம் தெரிந்தது. கழுத்தில் இருந்த காயம் அது தற்கொலையாக இருக்காது. கொலை! கொலைதான்!

அங்கு ஒரு நிமிடம் நிற்கக்கூடாது! உடனே கிளம்ப வேண்டும். இல்லாவிட்டால் அனர்த்தம் ஆகிவிடும்.

பெரிய பங்களா அது. நிறைய அறைகள். ஒவ்வொன்றையும் திறந்து பார்த்தான்.

யாரும் இல்லை. இரண்டு அறைகள் மட்டும் பூட்டப்பட்டு இருந்தன.





ஜன்னல் வழியாகப் பார்த்ததில் தட்டுமுட்டு சாமான்கள் மட்டும் தென்பட்டன.

பங்களாவில் யாரும் இல்லை என்பது நிச்சயம். திரும்பி வந்தான்.

அறைக்குள் போனான். அதையே ஒருமுறை சுற்றிப் பார்த்தான். ஓரத்தில் ஒரு மேஜை இருந்தது.

அருகில் போய் உட்கார்ந்தான்.

மேலே ஒரு வெள்ளிப் பேனா இருந்தது.

பக்கத்தில் டெலிபோன். அதை அடுத்து ஒரு காலி சிகரெட் பெட்டி.

மேஜையின் டிராயர்கள் திறக்கப்பட்டு இருந்தன.

அதன் உள்ளே இருந்த காகிதங்கள் எல்லாம் கலைக்கப்பட்டு இருந்தன.

மெதுவாக அவைகளை ஒவ்வொன்றாக விலக்கிப் பார்த்தான்.

ஒரு செக் புத்தகம்!

இரண்டு பத்திரிகைகள்!

ஒரு சின்னப் பெட்டியில் தூக்க மாத்திரைகள்!

ஓரமாக ஒரு ஆட்டோமாடிக் துப்பாக்கி!

இது தவிர ஒரு கறுப்பு டைரி இருந்தது.

நிறைய கைப்பட்டு அழுக்காகி இருந்தது அது.

கையில் எடுத்தான். ஒவ்வொரு பக்கமாக புரட்டிப் பார்க்க அதில் பெயர்களும், விலாசங்களும் கொடுக்கப்பட்டு இருந்தன.

விலாசங்களின் எதிரே பெரிய பெரிய தொகைகள் எழுதப்பட்டு இருந்தன.

திடுக்கிட்டான் நவீன். கையில் பெரிய புதையல் கிடைத்தது போல் இருந்தது.

மேஜையில் விரல்கள் மிருதங்கம் அடித்தன.

ஏனெனில் அத்தனையும் பெரிய பெரிய மனிதர்களின் விலாசங்கள்.

அந்தத் தொகைகளும், பெரிய தொகைகளாக இருந்தன.

அவசரமாக தன் பெயரைத் தேடிப் பார்த்தான்.

அதிர்ஷ்டவசமாக இல்லை.

டைரியை எடுத்து பையில் போட்டுக்கொண்டான்.

பிறகு கீழே கிடந்த சடலத்தைப் பார்த்தான்.

விட்டத்தில் தொங்கிய அந்த முடிச்சையும் பார்த்தான். ஒன்று புரிந்தது. சாதாரணமாக இதுபோன்ற முடிச்சுகள் ஒரு மாலுமிதான் போடக்கூடும், சாதாரண ஆட்கள் போட முடியாது.

அவனுக்கு யார் அதைக் கற்றுக்கொடுத்திருப்பார்கள்.

ஒருவேளை சூரியின் பழைய கப்பல் பழக்கம் இந்த முடிச்சுகளை போட வைத்திருக்கும்.



முன்பின் யோசியாமல் செய்த காரியம் அது! ஏனெனில் அவன் பின்பக்கமாகச் சென்றிருக்க வேண்டும்.

சட்டென்று தவறை அறிந்தபோது திரும்பினான்.

ஆனால் அதேநேரம் தோட்டத்திற்குள் ஒரு கார் நுழையும் சத்தம் கேட்டது.

திடுக்கிட்டான்.

வாசல் கதவு மூடப்பட்டு இருந்தது. ஆனால் தாழ்ப்பாள் இடப்படவில்லை. இப்போது தாழிட்டான்.

கார் அதற்குள் போர்டிகோவில் நின்றது.

அதன் வெளிச்சம் கண்ணாடி வழியே மங்கலாக அடித்தது.

கார் கதவு திறக்கப்படும் சத்தம். பிறகு அந்தப் பெரிய வாசற்கதவின் மேற்புறக் கண்ணாடியில் நடுவே ஒரு உருவம் வந்து நிற்பது தெரிந்தது.

ஒரு கணம் வியப்பு. பிறகு அந்த உருவத்தைப் பார்த்ததும் மனது சற்று நிம்மதியாகியது.

அது ஆணல்ல! ஒரு பெண்ணின் வரிவடிவம் அது!

அடுத்த கணம் கதவு 'டொக் டொக்' என்று தட்டப்படும் சத்தம்.

சற்றே யோசித்தான். பிறகு 'களுக்' என்று தாழ்ப்பாளை திறந்தான்.

வாசலில் ஒரு இளம் பெண் நின்றிருந்தாள்.

அவளை ஒரு பார்வை பார்த்தான். அதுவே குளிர் தருவதாக இருந்தது.

"என்ன வேணும்?"

"மிஸ்டர் சூரி என்னை எதிர்பார்த்துட்டு இருக்கார்!" என்று கூறினாள்.

"ஓ!" என்று கூறினான் அவன். மனசில் ஆயிரம் எண்ணங்கள் பளிச்சிட்டன. உள்ளே அவளை அழைத்து விசாரிக்க எண்ணினான்.

"வாங்க! வாங்க!"

உள்ளே நுழைந்தாள்.

அவனைத் தள்ளிவிட்டு மேலே போவாள் போலத் தோன்றியது.

"இருங்க" என்று சொல்லி நிறுத்தினான். அவள் திரும்பினாள்.

"ஹாலிலேயே உட்காருங்க. சூரி கொஞ்சம் பிஸியாக இருக்கார்!"

"இத்தனை மணிக்கா?" என்றாள் அவள்.

"இருக்கலாம். ஆனா என்கிட்டே யாரையும் உள்ளே விடாதே என்று சொல்லியிருக்காரு."

"என்னை வரச்சொன்னாரே!" என்றாள் அவள்.

"இருக்கலாம். என்கிட்டே யாரையும் உள்ளே விடாதே என்று சொல்லியிருக்காரு."

அவள் அவனைக் கூர்ந்து பார்த்தாள். திரும்பவும் அவள் கண்களில்

கத்திக் குளிர் அடித்தது. அவனை நம்பவில்லை போல் தோன்றியது. "தயவுசெய்து உள்ளே போய் நான் வந்திருக்கேன் என்று சொல்ல முடியுமா?" என்றாள். சொல்லிக்கொண்டே நிற்காமல் சட்டென்று எழுந்தாள். வாசல்புறம் நோக்கி விரைவாக சென்றாள்.

கதவு பக்கத்தில் நின்றுகொண்டாள்.

ஒருவேளை அவன் மீது அவநம்பிக்கை வந்துவிட்டது போலும்.

"மேடம்!" என்று சொல்லி அழைத்தான். "தயவுசெய்து நீங்களே உள்ளே போய் பேசிக்குங்க!"

"ஏன் சற்று முன்னாலே பிஸியா இருக்கார்னு சொன்னீங்களே..."

"அப்படித்தான் சொல்லச் சொன்னார். ஆனா நீங்க உடனே பார்க்கணும்னு சொல்றீங்க! நீங்களே போய் பேசிக்கிடுங்க."

இரண்டடிதான் எடுத்து முன்னால் வைத்தாள்

பிறகு தனது சந்தேக கண்ணோடு பார்த்தாள்.

"மேடம்! எதுக்கும் பயப்படாதீங்க. நான் அவனுடைய சிநேகிதன் தான். நீங்கள் தைரியமாக உள்ளே போலாம்" என்றான் அவன்.

அவள் அரைமனதை வைத்தவாறே அறை நோக்கிப் போனாள்.

அவள் மீது அவனுக்கு இரக்கமோ என்னவோ! சட்டென்று "மேடம்!" என்றான்.

நின்றாள்.

"ஒரு விஷயம் சொல்றேன். மிஸ்டர் சூரிக்கு ஒரு விபத்து நடந்திருக்கு!" என்றான்.

அவள் பார்வை மேலும் ஏதோ துன்புறுத்தலாகப் பார்த்தது.

"அவர் இறந்துபோயிட்டார்!" என்று தொடர்ந்தான் அவன்.

அவளுக்கு வந்தது கோபமா என்று தெரியவில்லை.

அவனை நம்பாதது போல் பார்த்தாள். பிறகு அறைக்குள் போக ஆரம்பித்தாள்.

## 6


அவனும் எழுந்தான். அவள் நுழைநத அடுத்த கணத்தில் அறையில் நுழைந்தான்.

அவள் பார்வை அறையை ஒரு தரம் சுற்றிவிட்டு கீழே சடலத்தின் மீது அமிழ்ந்தது.

அவள் அருகில் அவன் போய் நின்றான்.

அவள் லேசாகத் திரும்பினாள்.





அவள் முகத்தில் எந்தத் திகைப்பும் இல்லை. பயம்கூட இல்லை.

ஆனால் அதற்குப் பதிலாக உதட்டில் இடது ஓரத்தில் ஒரு குறுநகை வருவது போல் இருந்தது.

அது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. "மேடம்!" என்றான் மெதுவாக.

கண்களை உயர்த்தினாள்.

"ஒருவேளை உங்களையும் அவர் பிளாக்மெயில் பண்ணினாரா?" என்றான்.

அவள் பேசவில்லை. தலைகுனிந்தாள். பிறகு, "எப்படி செத்துப் போனாரு?" என்றாள்

"அதோ மேலே கயிறு தொங்குகிறதே!" என்று கூறினான்.

"இப்ப நம்ப இரண்டு பேரைத் தவிர அவர் இறந்தது வேறு யாருக்காவது தெரியுமா?" என்றாள்.

"நிச்சயம் ஒரு ஆளுக்கு தெரியும்!" என்றான் அவன்.

"யாருக்கு?"

"அவரைக் கொன்னவனுக்கு!"

அவள் கன்னத்தில் அறை விழுந்தது போல் திரும்பிப் பார்த்தாள். என்னது? இது தற்கொலை இல்லையா? என்றது பார்வை.

ஆனால் அவள் எதுவும் பேசவில்லை.

அவன் தொடர்ந்தான். "நிச்சயம் இது தற்கொலை அல்ல. தற்கொலை ஏன் பண்ணிக்கப் போறார்? தேவை இல்லை. ஆனால் வேற யாரோ தான் அவரைத் தற்கொலை பண்ணிக்கும்படி செய்திருக்கணும். அல்லது கொலை பண்ணியிருக்கணும்" என்றான்.

"ஏன் அப்படி சொல்றீங்க?"

"இப்ப நம்பளை பிளாக்மெயில் பண்ணக் கூப்பிட்ட மாதிரி சூரி அந்தக் கொலைகாரனையும் கூப்பிட்டிருப்பான். அவனுக்கு கோபம் வந்திருக்கும். இவனை விடக்கூடாதுன்னு நினைக்க, இங்கேயே அவனை கொன்றுத் தூக்குப் போட்டிருப்பான்" என்று சொல்லிக் கொண்டே அவன் அந்தக் கறுப்பு டைரியை அவளிடம் நீட்டினான். "இதில் உங்க பேர் இருக்கா பாருங்க!"

அவள் அதை அவசரத்துடன் பறித்துக்கொண்டாள். அதன் பக்கங்களை புரட்டினாள். ஒரு பக்கத்தை உற்றுப் பார்த்தாள்.

அதைக் கிழித்தாள்.

தனது ஜாக்கெட்டின் இடுக்கில் பத்திரமாகச் சொருகிவிட்டாள்.

"டைரி எனக்கு உபயோகம் இல்லே. காரணம் அதிலே என் பேரு இல்லே" என்றான் அவன்.

"ஓ! இதிலே இல்லாட்டினாலும் இன்னொரு டைரியிலே இருக்கும். மொத்தம் இரண்டு டைரி உண்டு!" என்றாள் அவள்.



திடுக்கிட்டான் நவீன். இத்தனை நேரம் இருந்த பரவசங்கள் அவனைவிட்டு ஓடிவிட்டன.

அந்தக் கணமே முகம் கறுத்தது.

அவளிடம் அத்தனை நேரம் பேசிய சுவாரஸ்யம் மறைந்துவிட்டது.

அவள் அவனை பரிவோடு பார்த்தாள்.

அவன் அதைப் பொருட்படுத்தவில்லை.

தானாக எழுந்து டிராயரை நோக்கிச் சென்றான்.

கீழே அதைக் கவிழ்த்துப் போட்டு அதிலிருந்து காகிதங்களை ஒவ்வொன்றாக படிக்க ஆரம்பித்தான்.

"நான் உங்களுக்கு உதவட்டுமா?" என்று கேட்டாள் அவள்.

பாதி ஆத்திரம் வந்தது.

"நீங்க போகலாம்" என்று கூறினான்!

அவள் போகவில்லை. நின்றாள்.

"நோ! மேடம் நான் என் விழியைப் பார்த்துக்கறேன்!" என்று சீறினான் அவன்.

சிறிது நேரம் நிசப்தம்.

பிறகு கேட்டாள்: "மிஸ்டர் சூரி ஸ்டாம்ப் சேகரிப்பாரா?"




இளமை இனிமை பெற நவீன சிகிச்சை

ஆண்மை குறைவு, நரம்பு தளர்ச்சி திருமணம் செய்ய பயம், வெட்கம் என்றாலே முதலில் நினைவில் வருவது பிரபல செக்ஸ் நிபுணர் ஊட்டி டாக்டர் V.R. நாத் என்பவர்தான். கடந்த பல வருடங்களாக ஊட்டி, ரேஸ்கோர்ஸ் ரோட்டில் ராம்கல்யாண் செக்ஸ் மருத்துவமனையை நடத்தி வருகிறார். இது இந்தியாவிலேயே செக்ஸ்க்கு என்று உள்ள ஒரே மருத்துவமனை என்பது யாவரும் அறிந்ததே. இங்கு சிஜிஸ்கேன், டாப்லர் ஸ்கேன், செக்ஸ்லிபிடோ டெஸ்ட், கேவர்னஸ் ஆர்டரிபில்லிங் டெஸ்ட் போன்ற அதிநவீன கருவிகள் மூலம் ஆண்மை குறைவின் காரணத்தை துல்லியமாக கண்டுபிடிக்கப்பட்டு நவீன சிகிச்சை தரப்படுகிறது. அதிக நாட்கள் சிகிச்சை தேவையில்லை. மிக விரைவில் ஆண்மை குறைவை போக்கும் அதிநவீன மருந்துகள் தரப்படுகின்றன. சைனிஸ் செக்ஸ் மெடிசன் மிகவும் சிறப்பான மருந்தாகும். முடியாது என்று கைவிடப்பட்ட ஆண்மை குறைவை மிக அற்புதமாக போக்குகிறது. இரத்த கொதிப்பு சர்க்கரை வியாதினால் ஏற்பட்ட ஆண்மை குறைவுக்கு சிறப்பு சிகிச்சை உண்டு.

பிரபல செக்ஸ் நிபுணர் Lion. Dr. V.R. நாத் B.Sc., D.H.M., M.R.S.H. (London)

(CERTIFIED SEXOLOGIST BY Mc. CARTHY OF AMERICAN UNIVERSITY) Phone: (0423) 45912.

ராம் கல்யாண் செக்ஸ் மருத்துவமனை NTC பில்டிங், ரேஸ்கோர்ஸ் ரோடு, ஊட்டி.

ஒவ்வொரு மாதமும் சந்திக்கலாம்.

கோவை : 3-ந்தேதி காலை 11 To 1 மணி 12-ந்தேதி மாலை 3 To 7 மணி 24-ந்தேதி மாலை 3 To 7 மணி
ஏ.ஏ.ஆர். காம்ப்ளக்ஸ் காந்திபுரம் 6-வது வீதி.

சேலம் : 18-ந்தேதி காலை 8 To 11 மணி
ஹோட்டல் செல்வம் (புது பஸ் ஸ்டாண்டு எதிரில்) Ph.: (0427) 449331

ஈரோடு : 3-ந்தேதியும் 18-ந்தேதியும் மாலை 3 To 6 மணி
ஹோட்டல் ஆக்ஸ்போர்டு (பஸ் ஸ்டாண்டு எதிரில்) Ph.: (0424) 226611

வேலூர் : 9-ந்தேதி காலை 8 To 11 மணி
ஹோட்டல் கங்கா A/c (அப்சரா தியேட்டர் அருகில்) Ph.: 23060

அவனுக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது.

"அவன் என்ன செஞ்சா எனக்கென்ன?" என்று கோபத்துடன் கேட்டான்.

திரும்பிய அவன் பார்வை அவள் கையிலிருந்த ஏதோ ஒன்றின்மேல் விழுந்தது. "அது என்ன?"

அவள் மெதுவாக முன்னால் வந்தாள்.

"இதுதான் ஸ்டாம்ப் வைக்கும் ஹோல்டர். கீழே கிடந்தது!" என்று கூறினாள்.

அதை வாங்கி இரண்டுபுறமும் புரட்டினான். யோசனை வந்தது. நிச்சயம் சூரி அதுபோன்று ஸ்டாம்புகள் சேகரிக்கும் பழக்கம் உடையவன் அல்ல. அந்த நுட்பக் கலைகள் எல்லாம் அவனுக்கு வராது. வேறு யாராக இருக்கும்?

இரு பக்கமும் புரட்டிப் பார்த்தான். நிச்சயம் அது சூரியுடையது அல்ல. கொலையாளியுடையதாக இருக்கும்.

கொலையாளி பெரிய ஆள் போலிருக்கிறதே! அவனுக்கு ஸ்டாம்ப் சேகரிக்கும் நுண்கலை தெரிந்திருக்கும் போல இருக்கிறதே! அது மட்டுமல்ல, சுருக்குப் போடும் வகையும் தெரிந்திருக்கிறது.

அப்படியானால்... சட்டென்று அந்தப் பெண்ணை நோக்கித் திரும்பினான்.

"மேடம்! உங்க பேர் என்ன?"

"நிகிலா!"

"சூரிக்கு கப்பல் மாலுமி யாராவது பழக்கமா இருக்குமா?"

"எனக்குத் தெரியாது ஸார். ஆனா ஒரு சமயம் போட் கிளப்பிலே அவரைப் பார்த்திருக்கேன். ஒரே ஒரு வாட்டிதான்!"

"தனியா இருந்தாரா?"

"யாரோடேயோ வந்திருக்காரு!"

சட்டென்று நவீன் எழுந்தான்.

அவள் ஆர்வத்தோடு அவனைப் பார்த்தாள்.

நேராக போனுக்குச் சென்றான்.

"பேசுவதைக் கவனி!" என்பது போல் அவளை ஒரு பார்வை பார்த்தான்.

பிறகு ரிசீவரை எடுத்தான். எண்களைச் சுழற்றினான்.

"ஹலோ! போட் கிளப்புங்களா?"

"எஸ் சார்!" என்றது ஒரு பெண்ணின் குரல்!

"மேடம்! மிஸ்டர் சூரியினுடைய கொத்து சாவி காணாமல் போயிருக்கு. ஒருவேளை அங்கே விட்டுட்டுவந்துட்டாரான்னு தெரியலை. பார்த்துச் சொல்ல முடியுமா?"



"நேத்திக்கு பருமனா ஒருத்தர் வந்தாரே கொஞ்சம் முன் வழுக்கை!"

"ஆமாம் மேடம்!"

"நேத்திக்கு யாரும் கொத்துச் சாவியை எடுத்துக் கொடுக்கலை ஸார்!"

"ரைட் மேடம்! அவரோட அந்த ஸ்டாம்ப் கலெக்டர் ஒருத்தர் வந்திருப்பாரே அவர் பேர் என்ன? மறந்துபோச்சே!" என்று கூறினான் நவீன்.

"மிஸ்டர் தாசரி சார்!"

"ஒருவேளை அவர் எடுத்துட்டுப் போயிருப்பாரோ?"

"தெரியாது சார்!"

"அவருடைய போன் நம்பர் தரமுடியுமா?"

"தாசரி நம்பரா? கொடுக்கிறேன்!" என்று சொல்லி "893752I" என்று சொன்னாள் அவள்.

"தாங்க்யூ!" என்று சொல்லி கீழே வைத்தான்.

தன் பையிலிருந்த டைரி ஒன்றை எடுத்து குறித்துக்கொண்டான்.

அவள் இன்னும் அதே ஆவல் கண்களுடன் அவனை பார்த்துக் கொண்டிருந்தாள்.

"பிரமாதமா வேலை பண்றீங்களே!" என்றாள்.

சிரித்தான் அவன்.

"அரை நொடியில் இத்தனை துப்பறிதலா?"

"இது ஒண்ணும் பெரிசில்லை மேடம்! குருட்டு அதிர்ஷ்டம்! எதையோ நினைச்சுக் கேட்டேன். அது சரியாப்போச்சு!"

"என்கிட்டே விஷயத்தைச் சொல்லலாமா?" என்று கேட்டாள் அவள்.

"நோ, பேபி. உங்களுக்கு எதுக்கு?" என்று புன்னகையுடன் கூறியவன், "நீங்க போகலாம் மேடம்!" என்றான்.

"ஒரு சமயம் பேபி! ஒரு சமயம் மேடமா?" சிரித்தாள். பிறகு விடுவிடுவென்று காரை நோக்கிச் சென்றாள். காரில் ஏறினாள்.

அவனும் வாசல் வரை வந்தான்.

படியில் இறங்கி கார் அருகே நின்றான்.

அவள் அவனை நோக்கி ஒரு புன்னகை புரிந்தாள்.

பிறகு, "தயவுசெய்து உங்க இடுப்புப் பக்கம் துருத்தி தெரியறது இருக்கி; மூடிக்குங்க!" என்று கூறினாள்.

சட்டென்று பார்க்கும்போது அவன் கொண்டுவந்த கைத்துப்பாக்கி வெளியே வந்திருந்தது.

"சாரி மேடம்!"

"தயவுசெய்து அதை உபயோகிக்காதீங்க! கெஞ்சிக் கேட்டுக்கறேன்."

"இல்லை உபயோகிக்கலை!"

அவள் திரும்பவும் ஒரு பார்வை பார்த்தாள்.

அதில் தெரிந்த எத்தனையோ விளக்கங்கள் அவன் மனசை எங்கேயோ இழுப்பது போல தெரிந்தது.

எத்தனையோ காலத்திற்குப் பிறகு அப்படி ஒரு பார்வை அவனைப் பார்க்கிறது.

"ரைட் போகலாம்!" என்றான்.

கார் விர்ரென்று சங்கீதமாக புறப்பட்டது.

நிகிலாவின் கார் நம்பரை மட்டும் சட்டென்று மனத்தில் பதிய வைத்து பிறகு டயரியில் குறித்துக்கொண்டான்.

பின்னர் நவீன் வீட்டுக்குள் தாவினான். ஒரு கர்ச்சீப்பை வெளியே உருவினான். அவன் கைகள் எங்கெல்லாம் தொட்டன என்பதை நினைவில் வைத்துக்கொண்டு,

அத்தனை கதவுக் குமிழ்களையும் நாற்காலிப் பிடிகளையும் துடைத்தான்.

அவனது கைரேகை அங்கே போலீசுக்குக் கிடைக்கக்கூடாது என்று பயம்.

## 7

வீடு திரும்பியதும் போனைச் சுழற்றி விசாரணையைக் கூப்பிட்டான்.

8, 9—ல் தொடங்கும் அந்த போன் நம்பரைக் கொடுத்து பெயரும், விலாசமும் கேட்டான்.

தாசரி,

3, லாங்க்டன் சாலை என்று தெரியவந்தது.

இந்தப் பெயரை நவீன் கேள்விப்பட்டதில்லை.

ஆனால் இரகசியமாக விசாரிக்க வேண்டும் என்று திட்டம் போட்டான்.

அன்று இரவு அரை நிம்மதியாக உறங்க முடிந்தது.

அடிக்கடி சூரியின் நினைவு மனசில் மோதியது.

பதினைந்து வருடத்தில் வயதாகி இருந்தான்!

உயிரோடு பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை.

பார்த்திருக்கலாம்.

மரணத்தில் கோரமாக இருந்தான். கண்கள் பாதியாகச் சொருகி... ஒரு விஷயம்!







# பூ வேலி!

இப்போதைய நிலவரப்படி கார்த்திக்குத்தான் 'சுக்ர திசை' என்று சொல்லலாம். அவர் நடித்த படங்கள்தான் இப்போது சூப்பர்ஹிட் ஆகிக் கொண்டிருக்கின்றன. சமீபத்தில் வெளிவந்த "உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்" படம் பட்டி தொட்டிகளில் கூட செம ஓட்டம் ஓடிக்கொண்டிருக்கிறது. அது தவிர அவர் கையிலும் வரிசையாக படங்கள் இருக்கின்றன.

இயக்குநர் பாரதிராஜாவால் 'அலைகள் ஓய்வதில்லை' படத்தின் மூலம் அறிமுகமானவர் இன்று இயக்குநர் விக்ரமன் படத்தில் கொடிகட்டி பறந்து கொண்டிருக்கிறார். அதுமட்டுமில்லாமல் இயக்குநர் கே. பாலச்சந்தரின் கவிதாலயா நிறுவன தயாரிப்பான 'பூ வேலி' என்ற படத்தில் செல்வாவின் இயக்கத்தில் நடித்துக்கொண்டிருக்கிறார். 'பூ வேலி'யில் கார்த்திக்கின் நடிப்பை பார்த்துவிட்டு இயக்குநர் சிகரமே கார்த்திக்கை புகழ்ந்துதள்ளியிருக்கிறார். இது கார்த்திக்குக்கு உற்சாக டானிக் ஆகிவிட்டது. எனவே 'பூ வேலி'யில் ரொம்பவும் சிரமம் எடுத்து நடித்து வருகிறார்.


அவனைப் பற்றி என்ன சொன்னாலும் நவீனின் தற்போதைய அந்தஸ்துக்கு அவன்தான் காரணம்.

அந்தப் பெரிய கொள்ளையில் மட்டும், அந்த விலையுயர்ந்த நவமணிக் கற்களை மட்டும் அவன் நவீனிடம் கொடுத்திராவிட்டால்...

## 8

திருமறையூர் கிராமத்து சுந்தரவரதர் கோவில் சித்திரை மாத உற்சவம்.

பழைய கால விமரிசையோ, உற்சாகமோ நசித்துவிட்டது.

உள்ளூர்ப் பெருமாள் அரசியல் கட்சிகளுக்கு வளைந்து கொடுத்துக் கொண்டிருந்தார்.

கடைசி நாள் உற்சவம்!

ஆறு, குளம் எல்லாம் வறண்டுவிட்ட நிலையில் ஒரு குடம் தண்ணீரில் சுவாமி தீர்த்தவாரி பண்ணினார்.

அன்றைக்கு சர்வ அலங்காரத்தோடு காட்சி!

அதிசயமாக இந்திய விமானங்கள் போல் இரண்டு அயல்நாட்டுக் கார்கள் வந்து நின்றன.

அதற்குக் கட்டியம் கூறி ஒரு ஜீப்!

"வரதாச்சாரி வரார்! வரதாச்சாரி வரார்!" என்று யாரோ கட்டியம் கூறினார்கள்.

யார் வரதாச்சாரி!

பலரும் அப்படித்தான் கேட்டார்கள்.

வரதாச்சாரி அந்த சிற்றூர் தந்த பெரிய அறிவு மேதை!

முப்பது வருடங்களுக்கு முன்னால் ஊரைவிட்டுப் போனவர்.

இண்டர்நேஷனல் கோர்ட்டில் இந்தியாவின் பிரதிநிதி வழக்கறிஞராக போய் அதில் நீதிபதி பதவியிலும் இருந்தவர்.

மனைவி இறந்துவிட, ஒரு அமெரிக்கப் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு போய்விட,

வடக்கே டில்லியில் நிரந்தரமாகத் தங்கிவிட்டார்.

இப்போது 65 வயதில் சுவாமி சுந்தர வரதர் இந்த அறிவு மேதையைத் தம் ஊர் வரும்படி கிருபை சாதித்தார்.

வந்துவிட்டார். இரண்டு புஷ்கல விமானங்களிலே!

பெருமாள் அப்போது சர்வாலங்காரம் பண்ணியிருந்த தோற்றம்.

இடுப்பில் உத்தரியம் கட்டி, சிவப்புப் பழம் போல மேனியுடன், கோவிலில் வரதாச்சாரி காலடி எடுத்து வைத்தார்.

அவரது வயதான கண்கள் பல திக்குகளிலும் சென்று தேடின.

யாராவது பழங்காலத்தவர் அவரைத் தெரிந்தவர் இருப்பார்களா?

ஒன்று இரண்டு பேரைக் கேட்டுப் பார்த்தார்.

யாரும் இல்லை என்று சீக்கிரம் தெரியவந்தது.

அத்தனை பேரும் போன இடம் புல் முளைத்து பல்லாண்டு ஆகிவிட்டது.

பெருமாள் முன் பவ்யத்துடன் நின்றார்.

சிறுவயதில் பார்த்து அனுபவித்த கோலம்.

எத்தனையோ மாமாங்கங்களுக்குப் பிறகு கிடைக்கிறது.

கண்ணில் நீர் கோர்த்தது.

சிறிது நேரம் பெருமாளின் வடிவழகில் ஈடுபட்டிருந்தவர், திடுக்கிட்டு இரண்டுமுறை அவரையே பார்த்தார்.

பிறகு, "அர்ச்சகரே! பெருமாள் மேலே இருந்த கமலப் பதக்கம்



எங்கே?" என்று கேட்டார்.

அர்ச்சகர் ஒரு விழி விழித்து "இதோ!" என்று விரலை நீட்டினார்.

"இதுவா கமலப் பதக்கம்!"

"ஆமாம்!"

"சரிதான்! அது இருக்குமே ஒரு கை அகலத்துக்கு! இது என்ன ஒரு ரூபாய் அகலத்துக்கு இருக்கு!"

"இதுதான் எங்களுக்குத் தெரிஞ்ச கமலப்பதக்கம்!"

"அப்படி சொன்னா நான் நம்புவேனா? அது பழங்காலத்து சுந்தரபாண்டியன் பெருமாளுக்கு செய்து போட்டது. ஆயிரம் வருஷ வயசு! அதிலே இருக்கிற நீல, புஷ்பராகம், வைரம் எல்லாம் அப்படியே நட்சத்திரக் கூடு கட்டினாற்போல இருக்கும். என்னாச்சு அது?"

"சுவாமி! அடியேன் இங்கே வந்து ரெண்டு வருஷம்தான் ஆகிறது. அடியேனுக்குத் தெரிந்தது எல்லாம் இதுதான்."

## 9

"சார்! அது பதினைந்து வருடத்திய கேஸ்! அந்தப் பதக்கத்தைத் தான் யாரோ கொள்ளை அடிச்சிட்டுப் போயிட்டாங்க!"

இன்ஸ்பெக்டர் கார்மேகம் அறுதியிட்டுக் கூறினார்.

அவருக்கு வயது 55 இருக்கும். இந்த ஊரில் இதற்குமுன் ஒரு தடவை சப்–இன்ஸ்பெக்டராக இங்கே இருந்திருக்கிறார்.

வரதாச்சாரிக்கு வருத்தம் பொங்கியது.

"என்னது? எத்தகைய பழம்பெருமைவாய்ந்த நகை! அது கொள்ளை போயிடுச்சுன்னு ரொம்ப சுலபமாக சொல்றீங்களே?" என்றார்.

"சார்! அதற்கு நான் என்ன செய்யறது? அப்போதே போலீஸ் நடவடிக்கை எடுத்துப் பார்த்தாச்சு! பொருள் கிடைக்கலை!"

"நல்லாதான் சொல்றீங்க! இப்போ கண்டுபிடிச்சாகணும்! ஆமாம்!"

வரதாச்சாரி விடவில்லை.

கார்மேகம் விவாதிக்க, இவரும் விவாதித்துக்கொண்டே போனார்.

ஒரு கோணத்தில் வரதாச்சாரி சொல்வது கார்மேகத்துக்கு 'சரி' போல் பட்டது.

அவரும் நமது சொந்த ஹோதாவில் எவ்வளவோ வருத்தப் பட்டிருக்கிறார்.

ஆயிரம் வருஷத்துக்கும் முந்திய பொருள் என்றால் அமெரிக்காவும்,

ஐரோப்பாவும் என்ன கொண்டாட்டம் போடும்!

"இங்கே அதைப்பற்றிச் சிண்டுவார் கிடையாதே!"

"சார்! ஒரு விஷயம் சொல்றேன்!" என்றார் கார்மேகம்.

"சொல்லுங்க!"

"இப்போ சர்க்கார் இந்த விசயத்தில் ரொம்ப அக்கறை காட்டுது! நீங்க கொஞ்சம் கிளப்பிவிட்டா..."

"இனிமே அது கிடைக்குமா?"

"கிடைக்காம எங்கே போகும்... இருபது வருஷம் முன்னாடி போன நடராஜர் சிலை திரும்பி வரலையா?"

"இல்லை! அது அயல்நாட்டுக்குப் போயிடுச்சுன்னா?"

"இல்லை சார்! அங்கே போகலை இது!"

"எப்படித் தெரியும்?"

"யாரோ எடுத்துப் பதுக்கியிருக்காங்க!"

"யாரு?"

"அதுதான் தெரியலை. இதுசம்ப்ந்தமா இந்த ஊரிலே ஒரு கொலையே நடந்திச்சு!"

"யார் ஆளுங்க?"

"திருவேங்கடத்தான்னு ஒருத்தர் இருந்தார். அவரைத்தான் கொன்னுட்டாங்க!"

"யாரு?"

"கொள்ளைக்காரங்க!"

"அப்புறம் என்னாச்சு? போலீஸ் சும்மா இருந்தாங்களா?"

"இல்லை. சூரின்னு ஒரு பெரிய கொள்ளைக்காரனை!"

"ம்!"

"அவனைப் பிடிச்சு உள்ளே தள்ளினாங்க!"

"ம்! அவ்வளவுதானா?"

"ஆமாம்! அவனுக்குத்தான் நகை பத்தின விவரம் தெரியும். ஆனா அவன் சொல்லவே இல்லை!"

"அப்புறம்?"

"அப்புறம் என்ன? பெருமாள் நகை போனது போனதுதான்! திரும்பி வரவேயில்லை!"

வரதாச்சாரியின் வயிறு பற்றியது.

என்ன ஜனங்கள் இவர்கள்.

தங்கள் பழைய காலத்து மகிமையை அறியாதவர்கள்.

இதுபோல மேல்நாட்டில் நடந்திருந்தால் நிமிலோகப்படுமே? இதை எந்தவிதத்திலும் விடக்கூடாது!

ஆமாம்! அந்தப் பதக்கத்தை மீண்டும் பார்த்தே ஆகவேண்டும்!



அமைச்சர் ஜெனிபர் சந்திரன்

# ஸ்வீட் 16

தமிழ்நாடு மீன்வளத்துறை அமைச்சர் ஜெனிபர் சந்திரனை 'ஸ்வீட் 16'க்காக கோட்டையில் அவருடைய அறையில் சந்தித்தோம். ஸ்வீட் 16க்கான 16 கேள்விகளை கேட்டதும், அமைதியாகவும், பொறுமையாகவும், நிதானமாகவும் பதில் அளித்தார். இதோ.....

**1. அரசியலுக்கு எப்படி வந்தீர்கள்?**

என் திருமணத்துக்குப் பிறகுதான் நான் அரசியலுக்கு வந்தேன். கலைஞருடைய கதைகளும் கவிதைகளும் அவருடைய பேச்சுத் திறமையும் எனக்கு ரொம்ப பிடிக்கும். அதுமட்டுமில்லாமல் சமுதாயத்திற்கும் தமிழுக்கும் அவர் ஆற்றிய தொண்டுகள், கொள்கையில் கொண்டுள்ள உறுதியும், தாழ்த்தப்பட்ட சிறுபான்மை சமுதாயத்தின்மேல் அவர் கொண்டுள்ள பற்றும், தி.மு.க.வுக்காக அவர் உழைத்த உழைப்பு பற்றியும் மற்றவர்கள் சொல்லக் கேட்டும், பத்திரிகைகளில் படித்தும் வியந்திருக்கிறேன். முரசொலியில் அவர் எழுதுகின்ற கடிதம் (அவர் எப்போது கடிதம் எழுதுவார் என்று எதிர்பார்ப்பேன். அவர் கடிதம் எழுதும் போதுதான் முரசொலிக்கும் பெருமை என்று நான் நினைப்பதுண்டு.) இவையெல்லாம் எனக்குள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன்பிறகுதான் நான் தி.மு.க.வில் இணைந்தேன். உறுப்பினரும் ஆனேன்.

எங்கள் ஊரில் தி.மு.க. பொதுக்கூட்டம் என்றால் உடனே புறப்பட்டுவிடுவேன். பொதுவாக பெண்கள் பொதுக்கூட்டங்களுக்கெல்லாம் செல்ல மாட்டார்கள். ஆனால், எங்கள் குடும்பப் பெண்களும், கிராமத்துப் பெண்களும் நான் கூட்டத்துக்குப் போகும் போது என்னுடன் சேர்ந்து வருவார்கள். தேர்தல் நேரத்தில் பெண்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து தேர்தல் வேலை (வீடு வீடாகச் சென்று வாக்குகள் சேகரிப்பது) செய்வோம். இப்படி படிப்படியாக பொறுப்புகள் கிடைக்கப் பெற்று செயல்பட்டேன்.

சென்னைக்கு வேண்டுமானால் நான் புதுமுகமாக இருக்கலாம். ஆனால் எங்கள் ஊரில் தி.மு.க. நடத்தும் போராட்டங்களில் எல்லாம் நாங்கள் கண்டிப்பாக கலந்து கொள்வோம். அதன்பிறகு எனக்கு மாவட்ட மகளிர் அணி பொறுப்பு கிடைத்தது.

**2. அமைச்சராவீர்கள் என்று என்றைக்காவது நினைத்தது உண்டா?**

என் கணவருடைய

குடும்பத்தினர் பெரியார், அண்ணா காலத்திலிருந்தே கழகத்தில் இருந்து வருகிறார்கள். என் மாமனாருக்கு 75 வயதாகிறது. இன்று வரை கட்சியில் பொறுப்புகள் வேண்டுமென்று விரும்பியது கிடையாது. ஆனால் கூட்டங்களுக்கும், விழாக்களுக்கும் நன்றாக செலவுகள் செய்வார்கள்.

நான்கூட இன்று வரையில் எனக்கு பொறுப்பு வேண்டும் என்று கேட்டதில்லை. தலைவராகவே எனக்கு தந்த பொறுப்புதான் இந்த அமைச்சர் பதவி. எனக்கு எப்போதுமே பதவியின்மேல் ஆசை கிடையாது. நான் சாகும் வரை தி.மு.க.வில் உறுப்பினராக இருக்க வேண்டும். நான் இறந்த பிறகு என் உடம்பில் தி.மு.க.வின் கொடி போர்த்தப்பட வேண்டும் என்ற ஒரே ஆசையை கொண்டிருப்பவள். இப்படிப்பட்ட நான் சட்டமன்ற உறுப்பினர் ஆவேன் என்று எதிர்பார்க்கவில்லை. அப்படி இருக்கும்போது அமைச்சர் பதவியை எப்படி எதிர்பார்த்திருப்பேன்.

**3. கலைஞரிடம் உங்களுக்குப் பிடித்தது எது?**

சாதாரணமானவர்களைக் கூட கலைஞர் மரியாதையோடும், பண்போடும், அன்போடும் நடத்துவது எனக்கு ரொம்பப் பிடிக்கும். அவருடைய அயராத உழைப்பும் எனக்குப் பிடிக்கும்.

**4. உங்களுடைய பொழுதுபோக்கு என்ன?**

தைப்பது, பூ வேலைகள் செய்வது, தோட்ட வேலை, பாடல்கள் கேட்பது.

**5. அடுத்த பிறவியில் யாராக பிறக்க ஆசைப்படுகிறீர்கள்?**

அடுத்த பிறவியை நான் நம்புபவள் அல்ல. அப்படியே பிறந்தாலும் மற்றவர்களுக்குக் கெடுதல் நினைக்க முடியாத பயன்தரக்கூடிய பறவையாகவோ அல்லது மரமாகவோ பிறக்க ஆசைப்படுகிறேன்.

**6. கலைஞரைத் தவிர உங்களுக்குப் பிடித்த அரசியல் தலைவர் யார்?**

எத்தனை அரசியல் தலைவர்கள் தெரிந்திருந்தாலும் கலைஞரைத் தவிர வேறு தலைவர் இனிமேல் எனக்குப் பிடிக்கப் போவதில்லை.

**7. கடைசியாக பார்த்த திரைப்படம் எது?**

பொதுவாக நான் திரைப்படமே பார்ப்பதில்லை. டி.வி.யில் கூட சினிமா பார்க்கமாட்டேன். கடைசியாக என்றால் சரியாக நினைவில்லை.

**8. அமைச்சராக இருப்பதினால் குடும்பப் பிரச்சினைகளை எப்படி சமாளிக்கிறீர்கள்?**

குடும்பப் பிரச்சினை எல்லா குடும்பத்திலும் எப்போதும் இருப்பதுதான். அமைச்சராவதற்கு முன் எப்படி குடும்பப் பிரச்சினைகளை சமாளித்து வந்தேனோ அதுபோலவே இப்போதும் சமாளித்து வருகிறேன். சமாளிக்காவிட்டால்





ஜெனிபர் சந்திரன்

நான் குடும்பத் தலைவியே அல்லவே.

**9. காதலைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

காதல் நிறைவேறாதவரை இனிமைதான். அப்படியே நிறைவேறி திருமணமாகிவிட்டால் சராசரி திருமண வாழ்க்கையை விட மிகக் கொடுமையானது என்று மற்றவர்கள் மூலம்

அறிகிறேன்.

**10. உங்களுடைய சின்னச் சின்ன ஆசைகள் என்ன?**

என் வீட்டிற்கு ஏதாவது ஒரு பொருள் வாங்கினாலோ அல்லது வீட்டில் ஏதும் விழா என்றாலோ என் நேரடி கவனத்தில் நடைபெற வேண்டும் என்று நினைப்பேன். என் கணவர் கையால்தான் தினமும் பூ வாங்கி வைக்கவேண்டும் என்று ஆசைப்படுவேன்.

**11. உங்களுடைய பலம் எது? பலவீனம் எது?**

பலம் என்றால் விடாமுயற்சியும் நம்பிக்கையும். பலவீனம் என்று சொன்னால் பிறர் அழுதால் என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது.

**12. உங்களுடைய நிறைவேறாத ஆசை என்ன?**

நிறைவேற்ற முடியாத ஆசைகளை என்றுமே நினைத்துப் பார்ப்பதில்லை.

**13. தமிழ்நாட்டில் உங்கள் மனதைக் கவர்ந்த இடம் எது?**

திருச்செந்தூரில் அம்மன்புரம் அருகே அருஞ்சுனை காத்த ஐயனார் கோவில் இருக்கிறது. அந்தக் கோவில் அமைந்திருக்கும் இடமும், கோவிலைச் சுற்றியுள்ள இயற்கை எழிலும், வீசும் காற்றும், நீந்திக் குளிக்க அமைந்துள்ள தடாகமும் எனக்கு ரொம்பப் பிடிக்கும். அது ஏழைகளின் குற்றாலம் என்றுகூட சொல்வார்கள்.

**14. உங்களிடத்தில் உங்களுக்குப் பிடித்தது எது?**

இந்தக் கேள்வியை என் கணவரிடம்தான் கேட்க வேண்டும்.

**15. உங்களுடைய லட்சியம் என்ன?**

திருச்செந்தூர் தொகுதியில் என்னை வேட்பாளராக்கி வெற்றியடையச் செய்த கலைஞர் அவர்களுக்கும், வெற்றியைத் தந்த தொகுதி மக்களுக்கும், தொகுதிப் பணிகளை திறம்பட செய்வதன் வாயிலாக திருச்செந்தூரில் இனி தி.மு.க.தான் வெற்றி பெற முடியும் என்ற நிலையை உருவாக்குவதே என் லட்சியம்.

**16. உங்களுடைய பருவ வயதில் நீங்கள் ரசித்து செய்த குறும்பு எது?**

தூத்துக்குடியில் அய்யனார் காபிதூளை அழகாக பாக்கெட்டில் போட்டுக் கொடுப்பார்கள். நாங்கள் அந்த பாக்கெட்டில் இருக்கும் காபிதூளை பாட்டிலில் கொட்டிவிட்டு, பாக்கெட்டில் மண்ணை நிரப்பி, காபித்தூள் பாக்கெட் போல செய்து, எதிர் வீட்டு வாசலில் வைத்துவிட்டு, யார் ஏமாறப்போகிறார்கள் என்று மொட்டை மாடியில் மறைந்து நின்று பார்த்துக்கொண்டிருப்போம். அப்போது அவ்வழியே வருபவர்கள் காபிதூள் பாக்கெட்டை பார்த்துவிட்டு, யாரோ விட்டுச் சென்றுவிட்டார்கள் என்று நினைத்து, சுற்றிலும் பார்த்துவிட்டு நைசாக எடுத்துச் சென்றுவிடுவார்கள். அதை என் சகோதரியிடமும் சகோதரர்களிடமும் சொல்லிச் சொல்லி சிரிப்பேன். ★



வரதாச்சாரியின் இரத்தம் கொதித்தது.

தாம் அயல்நாட்டிலேயே, குறிப்பாக, "தி ஹேக்" கிலேயே வெகுகாலம் இருந்துவிட்டதால் நாட்டில் நடந்த பல விசயங்கள் அவர் காதுவரை எட்டாமல் போய்விட்டது.

இப்போது, இந்தச் சமயம் பதக்கத்தைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று ஒரு அவா அவர் மீது உடும்பு போல் தொத்திக்கொண்டது.

சர்வதேசக் கோர்ட்டில் நீதிபதியாக இருந்து பிரயோசனம் என்ன?

உள்ளூரில் நடந்த இந்த மாபெரும் திருட்டைக் கண்டுபிடிக்க அவர் முயல வேண்டாமோ?

அதன் பலன்தான் அவர் சென்னை சென்றது. பிரபல துப்பறியும் இன்ஸ்பெக்டர் சிங்கைத் தூண்டிவிட்டது.

## 10

திடுக்கிட்டார் சிங்!

ஆமாம்.

இதுபோன்று ஆயுள் கைதியை வெளியே விடும்போது நிச்சயம் அது சி.ஐ.டி.இலாகாவுக்குத் தெரிந்தாக வேண்டும்!

அதுவும் இதுபோன்ற பிரசித்த கேஸ்களில் தண்டனையானவர்களை வெளியிடும்போது, இரகசியப் போலீசாருக்கு அது தெரிந்தே ஆகவேண்டும்.

சூரி ஒரு மாதத்திற்கு முன்னர் வெளி ஆனதே அவருக்குத் தெரியாது.

இப்போது வரதாச்சாரி செய்த தூண்டுதல் சிங் விசாரிக்கப் போகதான் சூரி விடுதலை ஆனது அவருக்குத் தெரியும்.

"லிங்க்!" என்றார்.

"எஸ் சார்!" என்றார் லிங்க் (ராமலிங்கம் என்ற அவரது துணை இன்ஸ்பெக்டர்.)

"எதிர்பார்த்தது நடந்தாச்சு! எடு ஜீப்பை!" என்றார்.

ஜீப் ஆரோகணித்து வந்தது. ஏறினார்.

அவரது ஆத்திரத்தை உணர்ந்தவர் போல டிரைவர் படுவேகத்தில் சாடிக்கொண்டு போனார்.

"முல்லை வில்லா" வாசலில் பிராந்திய இன்ஸ்பெக்டர் இன்பராஜ் காத்திருந்தார்.

சிங் போனதும் சல்யூட் செய்து வரவேற்றார்.

கீழே இறங்கியதும் ஒரு பார்வை சுற்றிலும் பார்த்தார் சிங்!

"மிஸ்டர் இன்பம்!"

"எஸ் சார்!"

"இந்த ஆசாமி சூரியைப் பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாதா?"

"சாரி சார்! எனக்குத் தெரியாது! டிபார்ட்மெண்டிலே சேர்ந்து ஐந்து வருஷம்தான் ஆகுது!"

"சரி விசாரிப்பிலே எதுவும் தெரியலையா?"

"இல்லை சார்! பட்டணத்துப் பணக்காரங்க பலபேர் இப்படி வெளிப்புறம் வந்து கடற்கரை ஓரமாகத் தனித்தனியா பங்களா கட்டிக்கிறாங்க சார்! அவங்களிலே இவரும் ஒருத்தர்னு நினைச்சேன்!"

"சூரி இறந்து எத்தனை நாள் ஆகுது?"

"பத்து நாள்!"

"போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் வந்துடுச்சா?"

"வந்தாச்சு!"

"என்ன சொல்லுது?"

"தற்கொலைன்னு உறுதியா முடிவு சொல்லலை!"

"சரி!"

"ரெண்டு மூணு இடத்தில் காயம் வேறே இருந்திருக்கு!"

"சரி!"

"அதை வைச்சும் ஒரு தீர்மானத்துக்கு வரமுடியலை!"

"சரி... குழப்பமாகத்தான் சொல்லியிருக்காங்க!"

"ஆமாம் சார்!"

கதவைத் திறந்து உள்ளே போனார்கள்.

"அடேயப்பா! அரண்மனைதான்... ஆயுள் தண்டனை அடைஞ்சவனுக்கு இவ்வளவு பெரிய அரண்மனையா?"

உள்ளே மெள்ள அடி எடுத்து நடந்தார்கள்.

ஹால் ஒரு ராஜ தர்பார் போல விளித்திருந்தது.

அடுத்து அந்த அறை!

"இங்கேதான்..."

சிங் அண்ணாந்து விட்டத்தைப் பார்த்தார்.

"அந்த வரி தெரியுதே! அங்கேதான் கயிறு கட்டியிருந்திச்சு!"

"மைகாட்! என்ன உயரம்? ஆமாம் அந்த உயரம் எப்படி ஏற முடியும்? ஏணி இருக்கா?"

"இல்லை சார்!"

"பின்னே சூரி எப்படி ஏறினாரு?"

"கீழே இருந்து கயிற்றை விட்டத்தில் விட்டெறிந்திருக்க வேண்டும்."

"முடியுமா?"



"முடியணும்!"

"எங்கே செய்து பாருங்க!"

ஒரு தாம்புக் கயிறு கொண்டுவரப்பட்டது.

இன்ஸ்பெக்டர் வசம் பார்த்து நின்று பலமுறை வீசிப் பார்த்தார். புகவில்லை விட்டத்தில் அது!

"வீட்டிலே எங்கேயாவது ஏணி இருக்கா?"

"இல்லை சார்!"

"நீண்ட கழி இருக்கா?"

"அதுவும் இல்லை சார்!" என்றார்.

சிங் திகைத்து நின்றார்.

"மிஸ்டர் இன்பம்! இது ஒண்ணே போதும்! நிச்சயம் இது தற்கொலை இல்லை!"

இன்பம் மவுனம் சாதித்தார்.

"வேறே ஏதாவது தடயம்?"

"அலசிப் பார்த்தாச்சு! எதுவும் கிடைக்கலை!"

"ரேகை?"

"ரேகையும் இல்லை! ஆனா வாசல்லே மட்டும் ரெண்டு வித்தியாசக் கார்த் தடம் பதிவாகியிருந்தது."

"அதைப் பதிவு பண்ணிக்கிட்டிங்களா?"

"ஓ! பண்ணியாச்சு!"

"அதை எங்களுக்கு அனுப்புங்க!"

"சார்! நாங்க உள்ளே வந்து பார்த்தபோது பிரேதத்தை கயிற்றோடு வெட்டி கீழே வைச்சிருந்தது!"

"ஓ! அப்போ தொங்கவிட்டு இல்லையா?"

"இல்லை! அதனாலே உள்ளே அவன் இறந்தப்புறம் யாரோ போயிருக்காங்க!"

"சரி! வேறே என்ன கண்டுபிடிச்சீங்க?"

"டிராயர் திறந்து, காகிதம் எல்லாம் இரைஞ்சு கிடந்தது சார்! அதுபோல எல்லா அறை அலமாரியும் திறந்து கிடந்தது சார்! யாரோ எதையோ தேடியிருக்காங்க."

சிங் தாவினார்.

"லிங்க்! நீ என்ன சொல்றே?"

"சார்! ஈஸி சார்! திருமணத்தார் கோவில் கமலப் பதக்கம் எங்கேன்னு தேடியிருக்காங்க!"

சிங் யோசித்தார்.

உடனே தலையை ஆட்டவில்லை அவர்!

"அப்போ பதக்கத்தை சூரி ஒளிச்சு வைச்சிருப்பானா?"

"ஒரு சின்னத் திருத்தம் சார்! ஒண்ணு பதக்கத்தைத் தேடி வந்திருப்பாங்க! அல்லது அது இருக்கிற இடத்தின் ருசுவைத் தேடி வந்திருப்பாங்க!"

"உன் திருத்தம் கொஞ்சம் பெட்டர்! அப்புறம், இன்பம், வேறே என்ன சொல்லுங்க?"

"வெளி ரோட்டிலே கொஞ்ச தூரத்தில் ஒரு கார் ரொம்ப நாழி நின்னிருக்கு! அங்கே டயர் அழுத்தி நின்ன இடங்கூடத் தெரியுது சார்!"

"அது வேறே காரா?"

"ஆமாம் சார்!"

"நீங்க சொல்றதைப் பார்த்தா மூணு கார் இல்லையா?"

"ஆமாம் சார்!"

"லிங்க்! அந்த பைலை எடு..."

பைல் சிங் கையில் போனது! அவசரமாகப் புரட்டினார்.

ஒரு இடத்தில் கண்ணை நிறுத்தி சுவாரஸ்யமாகப் படித்தார்.

"இந்தா லிங்க்! சூரிக்கு அப்போதே பல சகாக்கள் இருந்திருக்குன்னு போட்டிருக்கு. முக்கியமான நாலு பேர் போட்டிருக்கு."

"தெரியும் சார்! படிச்சுப் பர்ர்த்துட்டேன். சீனு, தசரதன், கோபால், நட்டு."

"இந்த நாலு பேர்லே யாராவதுதான் வந்திருப்பாங்க!"

சிங் கண்ணை மூடிக்கொண்டே கூறினார்.

லிங்க் அதை ஆமோதிப்பவன் போல தலை ஆட்டினான்.

"இந்த சகாக்கள் யாராவது சிறைக்குள்ளே போகலையே?"

"எல்லாரும் விடுதலை ஆகிட்டாங்க சார்! சூரி ஒருத்தன்தான் அகப்பட்டிருக்கான்.

வீடு முழுவதும் சுற்றினார்கள். பிறகு வாசல் பக்கம் வந்தார்கள்.

வாசலில் மங்கிக் கிடந்த டயர் தடயங்களைக் காண்பித்தார் இன்பம்.

சிங் சற்று குனிந்து பார்த்தார்.

அதிலேயே மூழ்கினது போல் ஒரு பார்வை!

"லிங்க்!"

"எஸ் சார்!"

"முதல்லே ஒரு கார்! பிறகு ஒரு கார் ரெண்டுமுறை வந்தாற்போலத் தடம்!"

லிங்க் அவைகளைக் கவனித்தான்.

"இதைத் தவிர இன்பம் சொல்றாரே ரோட்டிலே இன்னொரு கார்!"

"சரி சார்!"

"ஆக மூன்று கார்!"

சிங் தமது கைகளைப் பின்கட்டினார்.



சிறிது நேரம் பரந்தவெளிகளை பார்த்து நின்றார்.

பிறகு ஜீப்பை நோக்கி மெள்ள நடந்தார்.

"லிங்க்! டயர்த் தடயங்களை வைச்சு கார்களைக் கண்டுபிடிக்கணும்! அது ஒரு முக்கிய பாயிண்ட்!"

"எஸ் சார்!"

மீண்டும் சிங் மவுனம்.

ஜீப் அருகில் வந்து அவர்கள் நின்றார்கள்.

திரும்பவும் கண்ணை மூடி சிங் யோசித்தார்.

அவருக்கு அந்தக் கணத்தில் நிறைய யோசனைகள் வருவது போல் தோன்றியது.

லிங்க் அதைப் புரிந்துகொள்வான்.

ஒரு வார்த்தை குறுக்கிடமாட்டான்.

ஒரு நீண்ட நேர நிசப்தம் அங்கே இருந்தது,

பின்னர் திடீரென்று சிங் "இன்பம்" என்றார்.

"எஸ் சார்!"

"அப்போ நாளை வர்றோம்!"

"எஸ் சார்!"

ஜீப்பில் ஏறினார்கள்.

பெரிய தோட்டத்தைவிட்டு கேட் வழியே வெளியே வந்தார்கள்.

சாலையில் கார் ஓடியது.

"மெதுவாக போங்க!" என்றார் சிங்!

ஜீப் ஊர்வலம் ஓடியது!

"ஒரு தியரி, லிங்க்!"

"எஸ் சார்!"

"இங்கே மூணு கார் வந்திருக்கு!"

"ஆமாம் சார்!"

"இந்த மூணு பேரும் சூரியோட

## டென்ஷன்... டென்ஷன்...!

நரம்புத்தளர்ச்சி உள்ளவர்கள் சதா எரிந்து எரிந்து விழுந்து கொண்டிருப்பார்கள். டென்ஷன்... டென்ஷன்தான். தண்ணீர் குடிக்க தம்ளரை எடுத்தால்கூட கை வெடவெடவென்று



நடுங்கும். அப்படிப் பட்டவர்களின் நடுக்கம் நிற்கவேண்டுமானால், காலையிலும், மாலையிலும் திராட்சைபழச்சாறு அருந்த வேண்டும்.

ஒருவேளைக்கு 1 கிலோ திராட்சைப்பழத்தை சாறுபிழிந்து அருந்தி வரவேண்டும். இப்படியே ஒரு வாரம் அருந்தி வந்தால் போதும். நரம்புத்தளர்ச்சி குறைந்து, குதூகலமாகிவிடுவார்கள்.

பழைய சகாக்களாக இருக்க வேண்டும்!"

"சரி சார்!"

"இந்த மூணு பேரும் சூரி தயவினாலே பணக்காரர்களாக மாறியிருக்க வேண்டும்!"

"அப்படியா?"

"குறிப்பா சூரி கொள்ளை அடிச்ச சொத்திலே..."

"சரி சார்!"

"இவங்களுக்கு இப்போ சூரி சிறையில் இருந்து வந்தது பிடிச்சிருக்காது."

"புரியுது சார்! எங்கே சூரி தங்ககிட்டேயிருந்து பணம் கேட்டுக் கிட்டே இருப்பானோன்னு நினைச்சிருப்பாங்க!"

"ஆமாம்! அவனாலே சம்பாதிச்சு மேலே போனவங்க இவங்க! கார் கீர் வைச்சுக்கிட்டு சுகமா இருக்காங்க! அப்போ இவங்க கிட்டேயிருந்து சூரி பணம் பண்றதுக்கு வழி செய்ய மாட்டானா?"

"நிச்சயம் சார்!"

"அது இவங்களுக்கு ஆத்திரம் கொடுத்திருக்கும். இவங்க சூரியைக் குளோஸ் பண்ணியிருப்பாங்க!"

"மூணு பேரும் சேர்ந்துமா சார்?"

"சேர்ந்து இருக்காது. தனியாகத்தான் யாராவது செய்திருப்பாங்க! இதனாலே ஒரு லாபம் உண்டு!"

"என்ன சார்?"

"இவங்களுக்கு உள்ளே சச்சரவு மூண்டு சீக்கிரம் அம்பலத்துக்கு வந்துருவாங்க! இல்லாட்டி ஒருத்தனுக்கு ஒருத்தன் கொலை பண்ணிப் பாங்க!"

## 11

ஸீ-ப்ளூ.

மாலை நேரத்தில் அதன் தகதகப்பு தனி.

ரெஸ்டாரண்ட் ஒரு திருவிழா உற்சாகத்தில் இருக்கும்.

கூட்டம் ஒரு உல்லாசப் போக்கில் லயித்திருக்கும்.

நவீன் தமது கவுண்டர் ஓர ஆசனத்தில் அமர்ந்திருந்தான்.

"உங்களுக்கு போன்!"

ரீடா மோகன அசைவில் வந்தாள். ஒரு புன்னகை அனாயாசமாய்ச் சிதறியது.



நவீனின் இதயத்தில் ஒரு சின்ன நடுக்கம்! முகம் ஏற்கெனவே மாறிவிட்டது.

"ராம்! ராம்!" என்று சொல்லியவாறு தமது கனமான பின்பாகங்களை நாற்காலியிலிருந்து சுழற்றினான்.

தனி அறைக்குச் சென்றான்.

"அலோ!"

"இந்தா மிஸ்டர் நவீன்! தப்பிச்சுடலாம்னு பார்க்காதீங்க! உங்க வரம்புக்கு மேலேயே வசதி வந்தாச்சு! இப்போ செட்டில்மெண்ட் பதினஞ்சு லட்ச ரூபாய்!"

குரல் செயற்கை பூசியது.

அதன்பின்னால் யாரோ ஒரு கனத்த குரலாக இருக்க வேண்டும்.

யார் அது?

தாசரியா?

அல்லது வேறு ஆளா?

தைரியத்தைக் கொஞ்சம் பிடித்துக்கொண்டான்.

"யார் பேசறீங்க?"

"அதை வேற கேட்கறீங்களா? யாராவது சொல்வார்களா?"

"சொல்லாம இப்படி திடுதிப்னு பணம் கேட்டா..."

"ஏன் சொல்லணும்? முல்லை வில்லாவிலே முழிச்சிட்டு இருந்தீங்களே?"

"நானா? எப்போ?"

நவீனுக்குத் தைரியம் வந்திருந்தது.

"அடேயப்பா! முழுப் பூசணிக்காயை சோத்திலே மறைக்கிறீங்களே!"

"நீங்க சொல்றது எனக்குப் புரியலை!"

"புரியும்படியாச் சொல்லணுமா? கறுப்பு டயரியை எடுத்தீங்க! அந்தப் பெண்ணு அதிலே ஒரு ஷீட் கிழிச்சுக்கிட்டா தெரியாதா? எல்லாத்தையும்விட அந்தச் சடலத்துப் பக்கத்திலே நிற்கும்போது போட்டோவிலே விழுந்திருக்கீங்க?"

"நீங்க சொல்றது ஒன்றுமே புரியலை!"

"புரியும்! போட்டோ காப்பி அனுப்பறேன்!"

வியர்வை தெப்பலோடு வெளியே வந்தான்.

எவ்வளவு தைரியத்தை வரவழைத்திருந்தானோ அத்தனையும் இழந்துவிட்டான்.

போட்டோ!

அது உண்மையாக இருக்குமா?

கவுண்டருக்கு வந்தபோது அந்த வராந்தா ஹாலில் கும்பல் ஏதோ கனவில் காணுவது போல் பட்டது.

பிரமைபிடித்த கண்களுடன் வந்தான்.

போட்டோ... யார் எடுத்தார்கள்? எப்போது எடுத்தார்கள்?

இது பிளாக்மெயிலா?

இப்போது மணி எட்டு ஐந்து. ரெஸ்டாரண்ட் தனது உச்ச சுறுசுறுப்பில் திளைத்தது.

அழகான பெண் ஒருத்தி மேஜை இடுக்குகளில் அப்சரஸ் போல் நுழைந்தாள்.

எங்கும் புன்சிரிப்பு, புன்னகை, முறுவல், குறுநகை ஒரு திடீர் 'ஹா ஹா.'

ஆனால் எல்லாமே அவனுக்கு வினோதமாக தோன்றியது.

தனக்கும் அதற்கும் சம்பந்தமில்லாத உணர்வு!

ஒரு சின்ன உரையாடல் அவனது 'சித்'துக்குள் புகுந்து எவ்வளவு வேலை செய்கிறது!

வாசலில் ஒரு நிழல் அவரை அவசரமாக இழுத்தது.

'கிடங் சங்' என்ற ஓசையுடன் ஒரு சைக்கிள் அதன் ஸ்டாண்டில் ஏற்றப்பட்டது.

பவ்வென புன்னகை கலந்த பையன் உள்ளே துள்ளலாக வந்தான்.

வந்தது கவுண்டரை நோக்கி.

ரீடா அவனை வரவேற்றாள்.

பையன் நீட்டிய நீளக்கவரை வாசித்துவிட்டுப் பெற்றுக்கொண்டாள்.

பையன் விருட்டென்று திரும்பி வெளியே பாய்ந்தான். மறைந்தான்.

"உங்களுக்கு!" என்று ரீடா புன்சிரிப்பாய் நீட்டினாள்.

வாங்கினான். விரல்கள் காரணமில்லாமல் அதட்டின.

மிஸ்டர் ஆர்.என். நவீன் புரொப்ரைட்டர், ஸீ–ப்ளு என்று கண்டிருந்தது.

கவர் கனத்ததாக இருந்தது.

நாற்காலியை விட்டு எழுந்தான்.

அறைக்குள் போனான்.

ஏன் அவ்வளவு பதட்டம் தெரியவில்லை.

கவரை அமுக்கிப் பார்த்தான்.

நிறையக் காகிதங்கள் தெரிந்தன. மற்றபடி கடின வஸ்து எதுவும் இல்லை.

மென்மையாக அழுத்தினான். பேப்பர் வெட்டியை எடுத்து மெள்ள கவர் வாயில் கிழித்தான்.

உள்ளே பொதிந்த நிலையில் காகிதங்கள்!

அத்தனையையும் உருவினான்.

எல்லாம் வெறும் செய்தித்தாள் துண்டுகள்! கன்னாபின்னா



வெட்டுகளோடு இருந்தவை!

அவ்வளவையும் கொட்டி நடுவில் உள்ள ஒரு தனி வெள்ளை மடிப்பு காகிதத்தை எடுத்தான். பிரித்தான்.

அடுத்த கணம் கண்கள் உருண்டு நின்றன.

ஒரு சிலைக் கல்லின் இறுக்கம் வந்தது.

கண்கள் சரியாகப் பார்க்க மறுத்தன.

அது அந்த போட்டோதான்.

அவன் முல்லை வில்லாவில் சூரியன் சடலத்தின் அருகில் நிற்கும் போட்டோ!

"அடி கிராதகி!" என்றான்.

நிலா மீதுதான் அத்தனை கோபக்கணையும் ஓடியது.

வஞ்சகமாக முறுவலித்தாள்.

கொஞ்சினாள்.

இன்னும் பேசியிருந்தால் கட்டிலுக்கு அழைத்திருப்பாள்!

அந்தப் பாவி தான் மறைத்த காமிராவோடு அந்த போட்டோ எடுத்திருக்க வேண்டும்.

அறைக்குள் அவன் முடங்கியே இருந்துவிட்டான்.

## 12

"மோசம்! மோசம்!" என்றார் சிங்.

முகத்தில் எரிச்சல் தெரிந்தது.

எதிரே விங் கப்சிப்!

சிங்கின் கண்கள் மேஜை மீது பரவியிருந்தன.

பழைய கோப்புகள் மூன்று சிதறிக் கிடந்தன.

ஒன்றின் மார்பைத் திறந்து வைத்திருந்தார்.

மக்கிப்போன காகிதங்களில் 15 வருடம் பழையதான கேஸ். அச்சுக்குண்டு டைப் எழுத்தில் வியாபித்திருந்தது.

ஒருத்தர் அட்ரஸ் இல்லை! ஒருத்தர் போட்டோ இல்லை!

அலுப்பு வார்த்தைகள் உதிர்ந்தன.

போலீஸ் ரிக்கார்டிலிருந்து சிரமப்பட்டு இரண்டு நாட்களாகத் தேடி அந்தக் கோப்புகளை வெளிக்கொணர்ந்திருந்தார்.

ஒரு கேசுக்கு எத்தனை கோப்புகள் போட்டிருந்தார்கள்.

ஆனால் ஒன்றிலும் குற்றம் சாட்டப்பட்டவர்களது போட்டோக்

கள் இல்லை.

விலாசங்கள் இல்லை!

ஒரு விதிவிலக்கு!

கைரேகைகள் மட்டும் இருந்தன.

ஆனால் அங்கேயும் ஒரு ஏமாற்றம்!

அதன் கீழே இன்னார் என்று எழுதப்பட்ட பேனா எழுத்துக்கள் எல்லாம் காலக் கிரமத்தில் அழிந்து மறைந்து போயிருந்தன.

ஒரு பெருமூச்சுவிட்டார்.

"இந்த கேசை விசாரணை செய்த இன்ஸ்பெக்டர் மட்டும் கிடைக்கணும்! பிச்சுப் பரத்திடுவேன்!" என்றார் சிங்.

நல்லவேளை! அந்த இன்ஸ்பெக்டர் எட்வர்ட் டியூட்டியில் அகால மரணம் அடைந்திருந்தார்.

"லிங்க் எனக்கு ரெண்டு காரியம் செய்யணும்!"

"எஸ் சார்!"

"முதல்லே இந்தக் கைரேகையை கம்ப்யூட்டரில் கொடுத்து சோதனை செய்! யாராவது குற்றவாளிக்குப் பொருந்துதான்னு பார்க்கணும்."

"எஸ் சார்!"

"ரெண்டாவது இந்தக் கேஸ் நடந்த காலத்து செய்தி பத்திரிகைகள் வேணும்!"

"எஸ் சார்!"

"இந்தக் கேஸ் ஒருவிதத்தில் அதிசயம்!"

"எப்படி சார்?"

"ஐந்து பேர் குற்றஞ்சாட்டப்பட்டிருக்காங்க! ஒருத்தர் மட்டும் தண்டனை அடைஞ்சிருக்கார்! அப்புறம் அந்த மீதி நாலு பேர் போன இடமே தெரியலை!"

## 13

நவீன் ஹாலுக்கு மெதுவாக வந்தபோது போன் அடித்தது.

முதல் துணுக்கு மணி கேட்டதும் ஒரு அதிர்ச்சி!

மணி மட்டுமல்ல! எந்தச் சத்தமானாலும் ஒரு திடுக்! திடுக்!

போனை எடுத்தால்,

"அலோ!" என்று சொல்வதற்குக் கூட பயம்! வெறுமனே



## வில்வ மரம்



வில்வ மரத்தை புனித மரமாக கருதுகிறார்கள். இது பழமையான இந்திய மரமாகும். இந்த மரத்தின் காய், கனி, இலை, வேர் அனைத்துமே மிகுந்த மருத்துவ பயன்களைக் கொண்டதாகும்.

வில்வ இலைகளைப் பிழிந்து சாறு எடுத்து ஒரு குவளை நீரில் ஒரு கரண்டிச் சாறைக் கலந்து குடித்து வந்தால், காய்ச்சல், சளி குணமாகும். அதுமட்டுமில்லாமல், வில்வ இலைகளை தண்ணீர்விட்டு காய்ச்சி வடிகட்டி தண்ணீரை தினமும் காலை ஒரு அவுன்ஸ் குடித்து வந்தால் ஆஸ்துமா, மலச்சிக்கல் குணமாகும்.

அதுபோல வில்வக் காயின் சதையை எடுத்து பசும்பால் விட்டு அரைத்து தலைக்குத் தேய்த்து குளித்து வந்தால் கண் எரிச்சல், தலைச்சூடு குறையும்.

வில்வ பழத்தை பிசைந்து பாலில் கலந்து கற்கண்டு சேர்த்து காய்ச்சி சாப்பிட்டு வந்தால் பித்தம், குமட்டல், நெஞ்சு எரிச்சல் குணமாகும்.

இப்படிப்பட்ட மருத்துவ குணம் கொண்ட வில்வ மரத்தை சிவன் கோவில்களில் பார்க்கலாம். வில்வ இலை கலந்த தண்ணீரை சிவன் கோவில்களில் புனித நீராக இன்றும் தருகிறார்கள்.

---

வைத்திருக்க,

"டேய்!" என்று ஒரு செருக்குக் குரல்!

"நீ கேட்டுட்டிருக்கேன்னு தெரியும். ஓட்டல்லே இருந்தா ஆபத்துன்னு இங்கே பதுங்கிக்கிட்டியா?" இந்தா கேட்டுக்க! இப்போ உடனே கொண்டுவந்தால் பதினஞ்சு லட்சம்! இன்னும் ஒரு நாள் விட்டே, ரெண்டு மடங்காயிடும்! புரிஞ்சுதா? ஒளியாதே! வெளியில் வா!"

டொக் என்று வைக்கும் சத்தம்!

இதயத்திலும் ஒரு டொக். நேராக சோபாவில் சோர்வுடன் உடம்பை இறுத்தினான்.

நடுக்கம் ஒன்று மேலும் கீழுமாக ஓடியது.

சோபாவைப் பிடித்துக்கொண்டான். ஏதாவது செய்ய வேண்டும்? என்ன செய்வது?

அடுத்து திரும்ப போன் வநதபோது, மெதுவாகத் தூக்கிக் காதில் வைத்தான்.

"சார்!" என்று ரீடாவின் குரல்!

ஒரு குளிர்காற்று அவர் மீது பரவியது.

"என்ன ரீடா?"

"இன்னிக்கு உடம்பு எப்படி சார்?"

"இன்னும் சரியாகலை! நான் வரமாட்டேன்!"

"ரைட் சார்!"

"ரீடா!"

"எஸ் சார்!"

"நீ இங்கே கொஞ்சம் வரணுமே! ஓட்டல் காரை எடுத்துட்டு வா!"

"எஸ் சார்!"

பதினைந்து நிமிடத்தில் வந்தாள்!

"இந்தா ரீடா! நீ புத்திசாலி! எனக்கு ஒரு கஷ்டம் வந்திருக்கு! என்ன செய்யலாம் சொல்லு!"

## 14

ரீடா நவீன் முன்னால் அமர்ந்தாள்.

நவீன் மீண்டும் கூறினான்.

"எனக்கு பெரிய சங்கடம் வந்திருக்கு ரீடா! நான் என்ன செய்யலாம்?"

திரும்பவும் கூறினான்.

முகம் வாடி ஒரு கருமை விழுந்துவிட்டது.

தலை கலைந்துகிடக்க, அவனிடம் ஒரு அலங்கோலம் தென்பட்டது.

எல்லாவற்றையும்விட நவீன் திடீரென்று இளைத்திருந்தான்.

"சார்!" என்றாள் ரீடா! "ஏன் இப்படி திடீர்னு?"

"ஒரு சிக்கல் கேஸ்! கொலைப்பழி கூட என் மேலே வரும்! இப்ப என்ன செய்ய?"

அழுத்தமுடன் ரீடா அவனைப் பார்த்தாள்.

"நீங்கள் ஏதாவது தப்பு செஞ்சீங்களா?" என்றாள்.

"நான் செய்வேனா? ரீடா! யாரோ கொலை செஞ்ச குற்றம் என்மேலே விழும் போல இருக்கு!"

"நீங்க அதைச் செய்யவில்லை?"

"சத்தியமா இல்லை!"

"இப்போது எனக்கு ஒருத்தர் தெரியும். அவர்கிட்டே கொண்டு போறேன். நீங்க வாங்க பெட்ரூமுக்கு..."

கடைசி வார்த்தை அவனை நிமிர வைத்தது.

ஏன் என்பது போல் ஒரு பார்வை பார்த்தான்.



"நீங்க களைப்பா இருக்கீங்க! ஓய்வு எடுக்கணும்! நான் உங்களுக்கு மசாஜ் பண்றேன்!"

"நீயா?"

"ஆமாம்!"

"நீ..."

"ஒண்ணு சொல்றேன் சார்! நான் முதல்லே மசாஜ் பெண்ணாத்தான் இருந்தேன். அப்புறம் பார்லே வேலை பார்த்தேன். இரவு ஸ்கூல்லே படிச்சேன். மசாஜை விட்டுவிட்டு வந்தாச்சு. நீங்க வாங்க!"

"இல்லை எனக்குப் பிடிக்கலை!"

"சார்! நீங்க இங்கே பதட்டத்தில் இருக்கீங்க! ஒரு அரை நாள் நீங்க யார்கிட்டேயும் பேசக்கூடாது! முழுசா ஓய்வு எடுக்கணும். மசாஜ் இல்லாட்டி வேண்டாம்! நீங்க படுத்துக்குங்க வாங்க!"

பெட்ரூமுக்குப் போனார்கள்.

அவள் அலமாரியைத் திறந்தாள். பிரிஜ்ஜை திறந்தாள். அழகான பன்னல் கோப்பையில் தங்கச் சிவப்பில் திரவத்தைக் கொணர்ந்தாள்.

ஒரு கனமான 'பெக்' வி.எஸ்.ஓ.பி. அது. கைநீட்டி வாங்கிக் கொண்டான்! மெள்ள உதட்டுக்குக் கொண்டுபோகின்றான். உள்ளே சென்றது. செல்லமாக அயல் பிராந்தி! நெஞ்சை பாதிக்கா வண்ணம், பட்டு போன்ற மிருதுவில் உள்ளே போயிற்று.

படுக்கையில் சாய்ந்துகொண்டான்.

ஏ.சி. கும்ம்ம் என்று சுருதியிட ஆரம்பித்தது.

"மசாஜ் வேண்டாம்! கதவை அடைத்துவிட்டுப் போ!" என்றான்.

உள்ளே மெல்லிதாக சாம்பல் நிற இருட்டு!

கண்களை மூடி நெற்றிப் பொட்டுக்களை அழுத்தினான.

கொஞ்ச நேரம் அவனை படுத்தும் அந்த நினைவுகள் குபீர் குபீர் என்று மனதில் வந்தன.

பின்னர் அவை குறைய ஆரம்பித்தன.

கண்களில் இமைகள் சுமை போல அழுத்த,

தூக்கம் போர்வை போர்வையாக மேலே படிந்தது.

சீக்கிரத்தில் நினைவுகள் இழந்த ஆழ்ந்த உறக்கத்தில் அழுந்தினான்.

## 15

கண்கள் மெள்ள விழித்தபோது, தனது கால் பக்கம் ஏதோ நடப்பது தெரிந்தது.

விழித்துப் பார்க்க, ரீடா மசாஜ் செய்துகொண்டிருந்தாள்.

சட்டென்று கால்களை நவீன் மடித்தான்.

"இதென்ன ரீடா?" என்றான்.

வெறும் ஜட்டியிலும், சோளியிலும் முக்கால் நிர்வாண பிம்பமாக இருந்தாள்.

ஏ.சி.யிலும் அவள் மீது வியர்லவ மெல்லிதாகப் படிந்திருந்தது. மினுக்கியது.

திடகாத்திர உடல் அவளிடம்.

கையில் எண்ணெய் கலந்த பாட் வைத்திருந்தாள்.

"ஒண்ணும் கவலைப்படாதீங்க! கண்ணை மூடுங்க!" என்றாள்.

நவீன் கால்களை இழுத்து தலைகாணி மீது சாய்ந்தான்.

"உங்க மனதில் இருக்கிற டென்ஷன் போயிடும். பாருங்க இப்போ!" என்றாள்.

நவீனின் பதிலை எதிர்பாராமல் அவன் பக்கத்தில் ஒரு விருட் நொடியில் உட்கார்ந்தாள்.

அவள் செய்வது அவனுக்கு ஆச்சரியம் தந்தது!

வயது முப்பது தாண்டியிருக்கும்.

இளமை விவகாரங்களை எலலாம் தாண்டியவள் என்று நினைத்தான்.

இப்போது அவள் செய்கைகள்...

திடீரென்று கையை எடுத்து அவன் மீது பரவவிட்டாள்.

அவள் உடம்பின் பல பாகங்கள் அவன் மீது உரசிக்கொண்டன.

இப்போது அவளை தீர்க்கமாகப் பார்க்க முடிந்தது.

இன்னும் இளமையின் வனப்பு உடலில் இருந்தாலும், வயதின் மாற்றங்கள் அங்கங்கு தெரிந்தன.

பல பகுதிகள் அனுபவம் கொண்டது போல தோற்றம் காட்டின.

அந்தத் தோற்றமே அவனை அவள் மீது இழுப்பது போல் இருந்தது.

"வாங்க தொட்டு பாருங்க!" என்று கூறி அவனது கையை எடுத்து மார்பின் மீது வைத்தாள்.

கைகள் தயங்குவதைப் பார்த்து, அவைகளை நெஞ்சில் அழுத்தினாள்.

"உங்களுக்கு டீன்—ஏஜ்தான் பழக்கம்! இதையும் கொஞ்சம் பாருங்க!" என்று மெல்லிதான வார்த்தைகளில் கூறினாள்.

வார்த்தைகளில் கூட வொய்ன் தோய்ந்து இருக்குமா?

கேட்கும்போதே போதையை கிளப்பியது.

"ரீடா! இதெல்லாம் என்ன?" என்று அழுத்தமாக கேட்டான்.

"தயவு செய்து பேசாம இருங்க. உங்களுக்கு என்ன வேணும்னு தெரியும்!" என்றாள்.

அதன்பிறகு அவள் சுறுசுறு என்று நடவடிக்கைகளில் ஈடுபட்டாள்.

அவளது சொற்பத் துணிகளும் பறந்து எகிறின. அவனை அழுத்தமுடன் அணைத்தாள்.

ஓ! என்ன பலம் அவளுக்கு?



பல கிலோ அழுத்தத்தைத் தந்தாலும், அது சிறிது வலியை உண்டாக்கினாலும்,

ஒரு மென்மையான மிருது அழுந்துவது போலவும் இருந்தது அது.

அவள் மார்புகள்கூட என்ன கடினங்கள்! தளர்ச்சி இருந்தாலும் ஒரு வியப்பான கட்டுமான வலுவிலும் இருந்தன.

ஒரு புதுமையான அனுபவம் ஏற்படுவது போல் இருந்தது.

இதுவரை அனுபவித்து அறியாதது.

பிறகு அவள் விரல்கள் ஒரு வாத்தியக் கருவியைத் தடவுவது போல், அவனது மேனியில் சரளி வரிசையில் படிந்து புல்லரிக்க வைத்து ஓடின.

அவனது உடலில் எண்ணற்ற சக்தி மையங்கள் திடீரென்று எழுச்சி பெற்றது போல தோன்றின.

"ரீடா!" என்றான்.

"நான் மசாஜிலும் இருந்திருக்கேன். காபரேயிலும் இருந்திருக்கேன்! என்மாதிரி ஒரு உடலை நீங்க வேறு பெண்ணிடம் பார்ப்பது அபூர்வம் தெரிஞ்சுதா?"

மேலும் இரண்டு சுவையான அழுத்தங்களைக் கொடுத்துவிட்டு, விரல்களின் சரிகமாக்களை அவனது இடுப்புப் பிரதேசத்தில் பரிமாற ஆரம்பித்தாள்.

அவள் பேச்சின் மிருதுவும் தொடர்ந்தது.

"காபரே ஒரு தேகப் பயிற்சி! மசாஜ் மற்றவங்களுக்கு செய்வதும் ஒரு பயிற்சி! இதனால் என் உடம்பில் நூற்றுக்கணக்கான கவர்வு மையங்கள் உற்பத்தியாகி உள்ளன. அவை ஒரு ஆணின் மீது ஒட்டி, உறவாடிக்கொண்டு, தனித்தனி சுகங்களை தாங்களே உண்டாக்கிக் கொள்ளும், தாங்களே அனுபவித்துக்கொள்ளும்!"

ஒரு நீண்ட சுவாசத்தை விட்டுவிட்டுத் தொடர்ந்தாள்.

"இதனால் எனக்கும் ஈடில்லா சுகம்! என்னோடு உறவு கொள்ளும் உங்களுக்கு காணக்கிடையா சுகம் கிடைக்கும்!"

"ரீடா..."


"இனிமே பேசாதீங்க...! உங்க உடம்பும், என் உடம்பும் பேசிக் கொள்ளட்டும். இரண்டும் கொடுக்கிற ஒட்டுமொத்த சுகத்தை மட்டும் அனுபவியுங்க!"

அவன் கண் இமைப்பதற்குள் அவன் முகத்திலும் உதட்டிலும் அவளது நுனி நா சில்லென்று உணர்வை ஏற்படுத்திக்கொண்டு விளையாட ஆரம்பித்தது.

அவன் உடம்பு பலவிதங்களில் புரட்டப்பட்டன. பல நிலைகளில் நிறுத்தி வைக்கப்பட்டன.

இதனால் உள்ளே ஒவ்வொரு படியாக ஒரு உணர்ச்சி ஏறிக்கொண்டே போவது தெரிந்தது.

நவீனுக்குத் தன் நினைப்பு வழுவி மழுங்கியது. சொர்க்கங்கள் பல புதுமையாகத் திறந்துகொண்டிருந்தன.



கடைசியில் அவள் உறவாடலுக்கு வந்தபோது அதிலும் தனித்தன்மை காட்டினாள்.

அவள் காட்டிய பாஸ்சர்கள் வித்தியாசமாக இருந்தன.
கஜுராஹோவைத் தோற்கடித்துவிடும் போல இருந்தது.
அவன் கிளைமாக்ஸில் ஏறினான்.

## 16

காலையில் எழுந்ததும்,
புது நவீன் தோன்றி இருந்தான்.
மனதில் இருந்த வேதனைகளும், அச்சங்களும் மங்கி அழிந்திருந்த
இப்படியும் மனசில் ஒரு அற்புதம் நடக்குமா என்று நினைத்தான்
ரீடாவா இவ்வளவும் செய்தாள்.
கதவைத் திறந்து வெளியே வந்தான்!
வாஷ்பேசினில் முகம், பல், கழுவி விட்டுத் திரும்பியபோது,
ரீடா காப்பியுடன் நின்றாள்.
"நீ வீட்டுக்கே போகலையா ரீடா?" என்றான்.
அவள் பதில் பேசவில்லை.
ஒரு புன்னகை மட்டும் வந்தது.

இப்போது அவன் கண்களுக்கு அவள் ஒரு புதுமையான மந்திரவா தி போல் தோன்றினாள்.

"க்விக்! நீங்க சீக்கிரம் புறப்படணும். ஏற்பாடு பண்ணியிருக்கேன். எப்படி இருக்கு உ ம்பு, மனசு எல்லாம்?" என்றாள்.

"அதுதான் ஆச்சரியம். எல்லாத்தையும் ஓவர் ஆல் செய்து வைச்சது போல இருக்கு!"

"மனசில் வேதனை?"

"அப்படியே அமுங்கிக் கிடக்கு! அதைப் பற்றி அலட்சியமாக கூட இருக்கு!"

"சார் நீங்க தெரிஞ்சுக்கணும்! இந்த உறவுகள் வெறும் செக்ஸ் மட்டும் அல்ல! அவை ஒரு ஹெல்த் உண்டாக்கும் தெராபி! இந்த உறவுகளை நன்கு அறிந்து நல்லமுறையில் செஞ்சா இது அதிசயமான மருத்துவம் கூட! நீங்க பாருங்க! பிடில் தந்தி போல உங்க மனசும் ட்ரிம்மா இருக்கும், உடம்பும் இருக்கும். ரைட்! இப்போ நீங்க சரியா பேச முடியும். உங்களுக்கு ஒரு அப்பாயிண்ட்மெண்ட்! வாங்கி வைச்சாச்சு!"

"எங்கே?"

"இண்டர்நேஷனல் டிடெக்டிவ் ஏஜென்ஸி! அங்கே நீங்க மிஸ்டர்

வினோத்தைப் பார்க்கப் போறீங்க... உங்க பிரச்சினை எல்லாத்தையும் அவர் தீர்த்துடுவார்...!"

"எப்படி அவ்வளவு தைரியமா சொல்றே?"

"நீங்க கொலை செய்யலை அது உண்மைதானே?"

"ஆமாம்!"

"அப்போ அவராலே உங்க மேலே குற்றம் வராம பார்த்துக்க முடியும்!"

"குட்!"

"உங்ககிட்டே அவர் கேள்வி கேட்டுக் கேட்டு உண்மை எதுன்னு அறிஞ்சிக்கப் பார்ப்பாரு! நேற்று இருந்த நிலையில் நீங்க போயிருந்தீங்கன்னா, உங்க பதட்டம், தயக்கம், நடுக்கம் எல்லாம் பார்த்து நீங்கதான் குற்றம் செஞ்சிருக்கீங்கன்னு நினைச்சிருப்பார்! உங்க கேசை எடுத்துக்கமாட்டாரு! இப்போ ட்ரிம் ஆயாச்சு! புறப்படுங்க! 9 மணிக்கு பேட்டி!"

"நீ அவர்கிட்டே பேசிட்டியா?"

"பேசிட்டேன்! தைரியமாகப் போங்க!"

"உனக்கு அவரைத் தெரியுமா?"

"தெரியும்!"

"எப்படி?"

"நான் ஒண்ணு சொல்றேன் கேட்டுக்குங்க! துப்பறியும் ஏஜென்சி எதுவானாலும், 'பார்லே வேலை செய்யற பேண்கள், மசாஜ் செய்யற பெண்கள், காபரே பெண்கள் இவர்களோடு எப்படியாவது தொடர்பு வைச்சிருப்பாங்க. பணம்கூட கொடுப்பாங்க. எனக்கு வினோத்தை ரொம்ப நாளாத் தெரியும்! அவருக்கு நானும் உதவி பண்ணியிருக்கேன். துப்பும் கொடுத்திருக்கேன். இனிமே நீங்க அவர்கிட்டே தைரியமா, தெளிவோட பேச முடியும். நடுங்கமாட்டீங்க! உடனே போங்க!"

அவன் கண்கள் கலங்கின.

அவள் கைகளைப் பிடித்தான்.

"ரீடா! என்னிடம் சில மணி நேரத்தில் எவ்வளவு மாறுதலைக் கொண்டுவந்துட்டே! யு ஆர் கிரேட்!" என்றான்.

ஏனோ தெரியவில்லை ரீடாவின் கண்களில் நீர் வந்தது.

மறுபடியும் திரும்பி அதை அழுத்த முயன்றாள்.

## 17

இண்டர்நேஷனல் டிடெக்டிவ் ஏஜென்ஸியில் வினோத் முன்னால் ஒன்பது மணிக்கு நவீன் அமர்ந்திருந்தான்.

"சார்! நான் சொல்றதையெல்லாம் சத்தியமா இரகசியமா



வைச்சுக்கணும்!"

"ஆல்ரைட் சார்! பொதுவா இங்கே எல்லாம் இரகசியமாகத்தான் நடக்கும்."

நவீன் தமது பூர்வீகத்தை முதலில் ஆரம்பித்தான்.

தந்தை செல்லமாக அவரை வளர்த்தது, அவர் படிப்பில்லாமல் ஊர் சுற்றியது. குடியில் ஈடுபட்டது! போதைப் பொருளைப் பழகியது. கடைசியில் சூரியன் கோஷ்டியில் வந்து சேர்ந்தது. அத்தனையும் கூறினான்.

அப்போதுதான் சூரி கோவில் நகையைக் களவாட ஆரம்பிச்சான்! ரெண்டு ஊரிலே வெற்றி அடைஞ்சுட்டான்! அதனால்தான் திருமணத்தூர் கோவில்லே கையை வைச்சான்! என்றான் நவீன்.

"ஓ! புரியுது!"

"சார்! இது அத்தனையும் இரகசியம்..." என்று சொல்லி,

அந்தத் திருட்டு முயற்சியில் எப்படி சூரி கோவில் திருவேங்கடத்தான் என்பவரைக் கொல்ல நேர்ந்தது என்பதை கூறினான்.

"நீங்க யாரும் அதில் கூட்டுச் சேரவில்லையே!"

"அப்படி இல்லை! கொள்ளைக்காக எல்லாரும் போயிருந்தோம். ஆனா கொள்ளையோடு திரும்பிடணும்னு திட்டம்! ஆனா சூரிதான் கொலை... பண்ணிட்டான்."

"நீங்க பார்த்தீங்களா?"

"இல்லை. அவன் கோவிலுக்கு உள்ளே போயிட்டு வந்தப்புறம் இந்தமாதிரி கொலை நடந்து போச்சுன்னு விஷயத்தைச் சொன்னான்."

வினோத் சட்டென்று யோசனையில் ஆழ்ந்தான்!

"எல்லோரும் ஒத்துக்கிட்டாங்க! நான் அந்தப் பதக்கத்தை வைச்சு எதுவும் செய்துட முடியாதுன்னு அவங்களுக்குத் தெரியும்!"

"ஆமாம் அப்படிச் செஞ்சா ரிஸ்க் அதிகம்!"

"ஆமாம்! அதனால்தான் பேசாம இருந்தாங்க! எனக்கும் உள்ளூர ஒரு ஆசை!"

"என்ன?"

"நான் மனசில் ஒரு கொள்ளைக்காரன் இல்லை! சந்தர்ப்பத்தினால் இப்படி ஆனேன்! இதில் கொடுமையான ஒரு கொலை நடந்திருச்சின்னு தெரிஞ்சப்புறம் என் மனம் பிய்ச்சுக்கிட்டு எதிர்த்திசையில் போயிடுச்சி... மனசுக்குள்ளே சபதம் செய்தேன்! இனிமே இந்தத் தொழில் செய்யறதில்லைன்னு!"

"உங்க சகாக்கள் விட்டார்களா?"

"சூரி இருக்கிறவரைதான் கும்பல் சேர்ந்தோம். அப்புறம் பிரிஞ்சுட்டோம்! சந்திக்கிறதே அபூர்வமாப் போச்சு!"

"சரி!"

"அது பிரமாதமாப் பெருகிப்போச்சு! நான் ஒரு நல்ல வசதியில இருந்தாலும் கறைப்பட்ட காசை வைச்சுத்தான் நான் சம்பாத்தியம் தேடினேன் என்கிறது என் மனசை அரிச்சுக்கிட்டே இருக்கு!"

"ம்!"

"நான் செஞ்ச அநியாயங்களுக்கு பிராயச்சித்தம் ஏதாவது செய்யணும்னு நினைச்சேன்!"

"ஏதாவது செஞ்சிங்களா?"

"ஆமாம்! அந்தப் பதக்கத்தை ஒரு மார்வாடிகிட்டே கொடுத்து நாற்பது லட்சம் வாங்கி நாங்க நாலு பேரும் எங்களுக்குள்ளே பங்கிட்டுக்கிட்டோம். அந்தப் பணத்தில்தான் ரெஸ்டாரண்ட் வைச்சு நான் ஏகமா சம்பாதிச்சது. இரண்டு மாசம் முன்னாடி, அந்தப் பதக்கத்தை நானே மார்வாடிக்குப் பணம் கொடுத்து வாங்கிட்டேன். இப்போது எனக்கும் மனச்சாட்சி. அதனால் நினைச்சேன் சார்! இந்த பதக்கத்தை ஏன் நான் அதே திருமணத்தூர் கோவில்லே கொண்டு சேர்த்துடக்கூடாதுன்னு!"

"சேர்த்துட்டீங்களா?"

"இல்லை! யோசனையிலேயே இருந்தேன்! அதை எப்படிச் செய்யலான்னு விழிச்சிட்டிருக்கேன்! நீங்க வழி சொன்னா!"

வினோத் எழுந்தான். "ஏன் சார் இதுக்காவா என்கிட்டே வந்தீங்க?"

"இல்லை சார்! கொஞ்சம் இருங்க! அதைச் சொல்லுகிறேன்! என் சகாக்களில் யாரோ ஒருத்தன் என்னை பிளாக்மெயில் செய்ய ஆரம்பிச்சுட்டான்.

"யார் அது?"

"அதான் தெரியலை! இத்தனை வருஷம் ஆயிட்டுதா ஒருத்தருக்கு ஒருத்தர் தொடர்பு இல்லாமல் போச்சு!"

"சரி!"

"இப்போ எல்லோரையுமே மறந்தாச்சுன்னு வச்சுக்குங்களேன்! சந்திப்போ தொடர்போ இல்லாததனால்!"

"இயற்கைதான்!"

"இப்போ திடீர்னு ஒருத்தன் பிளாக்மெயில் பண்ணக் கிளம்பிட்டான்!"

"ஓ!"

"அதுக்கு இசைவாக ஒரு போட்டோ என்னை எடுத்து வைச்சிருக்கான்!" என்று சொல்லி, சூரி நவீனுக்கு போன் செய்த விவகாரத்திலிருந்து, அவன் இறந்துகிடந்ததை நவீன் போய்ப் பார்த்தது வரை நடந்ததை நடந்தபடியே கூறினான்.

வினோத் எல்லாவற்றையும் கிரகித்துக் கொண்டிருந்தான்.

"இப்போ உங்ககிட்டே வந்தது எனக்கு ஏதும் ஆபத்து இல்லாமல் பார்த்துக்கணும் என்கிறதுக்காகத்தான் சார்!"



# 18

துப்பறியும் ஏஜென்ஸியின் வினோத் அந்த இரவு 'பார்' பக்கம் போனபோது, மணி பதினொன்று! தலையைப் பாதிக் கலைத்து, கண்ணில் பாதி போதையைக் கொண்டு வந்திருந்தான்.

உண்மையில் 'ரெட்ஹில்' என்ற அந்த பார் உள்ளே பெரிய புகைக் கும்பல், உள்ளே மேஜைகள் நிறைந்திருந்தன. விஸ்கியும், தின்பண்டங்களும் சேர்ந்த நெடி ஒரு கனத்த மேகம் போல் அங்கே வியாபித்திருந்தது.

தன் மேஜையில் வினோத் உட்கார்ந்து பீர் உத்தரவு கொடுத்தான்.

சிப்பந்தி பெண், முப்பதுகளில் இருப்பவள், முத்தாக புன்னகை பூத்து, காற்று துகள்கள் விசிறி எழும் பீர் தம்ளரைக் கொண்டு வைத்தாள்.

"ஹாய்!" என்றான்.

"ஹாய்!"

அது அவளுக்கு ஆச்சரியமாக இருந்திருக்க வேண்டும்.

ஏனெனில் வாடிக்கையாளர்கள் அநேகமாக பதினைந்து பதினாறுகளையே மோகமாக விரும்பியிருந்தார்கள். சிப்பந்திகள் குறைவு ஏற்பட்டால் அவசரத்துக்கு கூடமாட உதவுபவள் அவள்.

இப்போது அதே நிலையில்தான் வினோத்தின் மேஜைக்கு சேவை செய்ய வந்திருந்தாள்.

அவளுக்கு ஹாய் சொல்லிவிட்டான் என்பது அவளது அடிவயிற்றிலிருந்து இன்பத்தை மேலே கொண்டுவந்தது.

"ஓ!" என்று சொல்லி அவன் எதிரே மெள்ள அமர்ந்தாள்.

உண்மையில் அவள் வயதுக்கு அவள் மோசமாக இல்லை. அவளது மேற்புறங்களின் கச்சிதங்கள்தான் சாய்ந்துவிட்டன.

மற்றபடி உடம்பின் பிடிப்பு, வளப்பு, ஜொலிப்பு எல்லாம் இன்னும் அவளைக் கவர்ச்சியாகக் காட்டிக்கொண்டிருந்தன.

"பீர் சாப்பிடறீங்களா?" என்று அவளைப் பார்த்து கேட்டான்.

'வேண்டாம்!" என்றாள் அவள்.

"என் கணக்கில் வாங்கிகொள்ளுங்கள்" என்றான் அவன். "எனக்கு ஒரு விஸ்கி!"

மதுகோப்பைகள் வந்தன.

மெல்லிதான அதன் மணங்கள் கலந்துகொண்டு மறைந்தன.

இருவரும் கோப்பைகளை முத்தமிட்டு சூப்பினார்கள்.

உள்ளம் உடல் எல்லாம் ஒரு ஆவி மயமான உணர்ச்சி!

"மாம்!"

"எஸ் சார்!"

"என்ன, பேசவே இல்லை?"

"உங்களைப் பார்த்தா நிறைய பேச வேணும் போல இருக்கு! அபூர்வமாத்தான் இந்த மாதிரி கிடைப்பாங்க!"

"சுத்தமா புகழாதே! இங்கே வர்றவங்க எல்லாம் ஒரே ரகம்தான்!"

"அப்படிச் சொல்லாதீங்க! சில சமயம் தனிமையான ஆத்மாக்கள் இங்கே வரும். அவங்களுக்கு ஏதோ கஷ்டம் இருக்கும். அதனால் ஒரு மாலை நேரத்தை இங்கே கழிக்க வருவாங்க! அவங்க மேலேதான் எனக்கு தனி இண்ட்ரெஸ்ட் வரும்."

"நான் அப்படி வரலை!"

"தெரியும்!"

"தெரியுமா?"

"ஆமாம்! நீங்க உங்க வழக்கமான விசித்ராவைத் தேடினதும் தெரியும்!"

வினோத் கண்கள் ஒரு சுருக்குடன் அவளைப் பார்த்தது.

"என்னை முன்னாலேயே பார்த்திருக்கியா?"

"இல்லை! நான் இங்கே புதுசு! விசித்ரா என்னை இங்கே விட்டுட்டு விடுமுறையில் போயிருக்கிறா! மூணு மாசம் கழிச்சுத்தான் வருவா!"

"ஏன் எங்கே போயிருக்கிறா?"

"கிராமத்துக்கு! அப்பா, அம்மாவை பார்க்கப் போயிருக்கிறா! பட்டணத்தில் விசித்ரா பெரிய கம்பெனியில் வேலை பார்க்கிறா, ஆயிரம் ஆயிரமா பணம் அனுப்பறான்னு பெற்றோருங்க நினைச்சிட்டிருக்காங்க."

வினோத்தின் கண் இரக்கத்தில் மென்மை ஆகியது.

"இந்தாப் பாருங்க!"

தனது இடுப்பில் ஒட்டியிருந்த சிறு பர்சை எடுத்தாள். அதைத் திறந்தாள். ஒரு பாஸ்போர்ட் போட்டோவை அவனிடம் காட்டினாள்.

"என் போட்டோ! உன்கிட்டே எப்படி வந்திச்சு?"

"விசித்ரா கொடுத்தா! நீங்க வந்தா சரியா கவனிச்சு, உங்களுக்கு உதவி செய்யணும்னு சொல்லி இருக்கிறா. சாட்சி போதுமா?"

வினோத் மேலே பேசவில்லை.

விஸ்கியை மென்மையாகச் சுவைத்துக் கொண்டிருந்தான்.

அவன் எண்ணங்கள் மிருதுவாகச் சுழன்று மேலே புகை போல போய்க் கொண்டிருந்தது.

இடையே அந்தப் பெண்ணின் மீது பார்வை விழுந்தது. அவள் முகத்தில் குறுகுறுப்பும், களையும்! உதடுகள் மிருதுவாக வளைந்து ஆரஞ்சு சுளைகளாகத் தெரிந்தன.

சருமத்தில் இன்னும் இளமை அழியாமல் தளிர்தன்மை காட்டியது கனமான மார்புகள் இவளுக்கு!

சின்னக் கும்பங்கள் பூத்தது போல் தோன்றின! தட்டினால் ரப்பர் போல துள்ளும் என்று நினைத்தான். 'க்ளுங்' என்று சத்தம் கூட வரும் என்று நினைத்தான்.



இடை சின்னதாகச் சுருங்கி, அங்கங்கே வரிகள் கூடக் காட்டின. அதற்குக் கீழ் எல்லாம் அவன் கற்பனையில் ஓடின.

அங்கே அவளது வெண்மையான பகுதிகளிடையே சின்னஞ்சிறு கருங்கல் சிற்பம் போல் அவள் பெண்மை பதிந்திருக்கும் என்று ஊகம் ஓடியது.

"என்ன பேசலையே?" என்றாள் அவள்.

"உன் பேரைச் சொல்லலையே?" என்றான் அவன்.

"ரசிகா!"

"நல்ல பெயரா இருக்கே!"

"நீங்க வந்த விசயத்தைக் கேளுங்க. என் மேலே நம்பிக்கை இல்லையா?"

"நம்பிக்கைதான்!"

"அப்போ பேசுங்க!" அவனை நெருக்கி அவள் உட்கார்ந்தாள். ஒரு கதிர்வீச்சு போல சூடு அவன் மீது ஆரம்பித்தது. அதைப் பொருட்படுத்தவில்லை அவன்.

"எனக்கு இந்த பார் பற்றி சில செய்தி வேணும்!"

"ஓ! தரலாமே!"

"இது யாருக்குச் சொந்தம்?"

"தாசரின்னு ஒருத்தர் சார்!"

"அவர் எங்கே இருக்கார்?"

"வீட்டிலே!"

"இங்கே வரமாட்டாரா?"

"தேவைபட்டால் வருவார்."

"அவர் என்ன பரம்பரை பணக்காரரா?"

"நீங்க என்ன நான் இங்கே வேலையில் இருக்கணும்னு விரும்பறீங்களா? அல்லது..."

"நோ மேடம்! இங்கே நீங்க அவசியமாக இருக்கத்தான் வேணும்!"

"உங்களுக்கு எப்படிப்பட்ட செய்தி வேணும்?"

"ஒரு பழைய கால நகை காணாமல் போய்விட்டது!"

"துப்பு வேணுமா?"

"கிடைச்சா நல்லது!"

அவள் யோசனையில் ஆழ்ந்தாள்.

இடையிடையில் மவுனமாகச் சூப்பினாள்.

கோப்பையை மேஜையில் அழுத்தி வைத்தாள்.

"இங்கே பிரகாஷ்னு ஒருத்தன் வருவான். அவனை பிடிச்சுக்குங்க!"

"அடையாளம் என்ன?"

"ஜிப்பா போட்டிருப்பான்!"

வினோத் ஒரு நீண்ட மூச்சு இழுத்தான்.

"பிரகாஷுக்கு நகை பற்றி எல்லாம் அத்துப்படி!"

"குட்! ஆள் எப்போ வருவான்?"

"இப்போ வர்ற டைம்தான்! அடேடே ஆயுசு நூறு! இதோ வந்துகிட்டு இருக்காரு."

பிரகாஷை ரசிகா அந்த மேஜைக்கு அழைத்தாள்.

பிரகாஷ் வந்தான்.

அவனுக்கு என்றைக்கும் நாற்பது வயது. அப்படி ஒரு தோற்றம்.

"பிரகாஷ்! இது என் சினேகிதர். அவருக்கு பல செய்திகள் தேவை!" என்றாள் ரசிகா.

"எல்லாம் தரேன்! ஷ்யூர்!" என்றான் அவன்!

தொளதொளக்கும் ஜிப்பா!

டை பண்ணிய நரை தெரியும் மீசை!

கோல்ட் வாட்ச்!

இவைதான் பிரகாஷ்!

"நல்ல பிராந்தி வேணும்" என்றான் பிரகாஷ்!

பிராந்தி வந்தது!

தண்ணீர் விடாமல் ஒரு சூப் சூப்பி நெருப்பு முழுவதையும் நாக்கில் அனுபவித்த பாவனை.

"பிரகாஷ் எனக்கு பழைய நகைகள் பற்றி கொஞ்சம் தெரியணும்!" என்று ஆரம்பித்தான் வினோத்.

"வாங்கப் போறீங்களா? விற்கப் போறீங்களா?"

வினோத் பேச்சை நிறுத்தினான். அவன் கண்கள் இப்போது சுழன்று பல திசை பரவியது.

அந்த சுழற்சியில் ஒன்று சட்டென்று புலனாகியது.

அனேக ஜோடி கண்கள் அவன் மீது நாசூக்காக லயித்திருந்தன.

உண்மையில் அவன் துப்பறிய வந்தது போக, அவனையே பலர் துப்பறிந்து கொண்டிருந்தார்கள்.

"ஒரு விஷயம் பிரகாஷ்!" என்று மெதுவாகக் கூறினான்.

"என்ன?"

"நான் தாசரியை பார்க்க வேண்டும். ஏற்பாடு பண்ண முடியுமா?"

"ஓ! முடியுமே!"

"எங்கே எப்போ சந்திக்கலாம்?"

"மீன்துறைக்கு வந்துடுங்க! அங்கே ராணின்னு ஒரு டிராலர் அதிலே இருப்பாரு!"

"சாரி மிஸ்டர் பிரகாஷ்! எனக்கு கடற்காற்று ஒத்துக்காது. அவரை வீட்டிலே சந்திக்க முடியாதா?"

"அபூர்வம் சார்!"

"ஏன்?"

"எப்போதும் வெளியிலேதான் இருப்பாரு! வீட்டில் எனக்கு போ சந்தர்ப்பம் கிடைச்சா உங்களுக்குச் சொல்றேன். உங்க போன் நம்ப என்ன?"

"எனக்கு போன் கிடையாது!"



"ஓ! அப்போ என்ன செய்ய?"

"நான் உங்களுக்கு போன் செய்யறேன்!"

"ரைட்!"

வினோத் எழுந்தான். அந்தப் பெண் ஓடிவந்தாள். "பில்!" என்றாள் அவள்.

ரெஸ்டாரண்ட் வெளியே வந்தான்.

நடுநிசி முன்னேறியிருந்தது.

ஆகாயம் அத்தனையும் கருமை!

லேசாகக் குளிர் அடிக்க ஆரம்பித்தது.

ஸ்கூட்டரைக் கிளம்பினான்.

டுர்ர்ரிட்டுக் கொண்டு வெளியே வந்தான்.

## 19

"இந்தா! நீ தப்பிச்சு போக முடியாது!" என்றது குரல்!

நவீனின் சப்த நாடியும் ஒடுங்கியது.

இப்போது சில நாட்களாக அதன் தொந்திரவு இல்லாமல் இருந்தது. இன்றைக்கு மீண்டும் அந்த போன் குரல் வந்துவிட்டது.

"எச்சரிக்கை! புது இடங்களுக்குப் போய் புது உதவிகளைத் தேடாதே! விஷயம் மேலும் ஆகும்!"

குரல் சட்டென்று அறுந்தது.

நவீன் நடுக்கத்துடன் போனை வைத்தான்!

ஒருவிதத்தில் அவனுக்குத் திருப்தி!

அந்தக் குரலை பதிவு செய்ய வினோத் சில கருவிகளை போனில் பொருத்தியிருந்தான்.

இப்போது அந்தக் கரகரப்புக் குரல் ரிக்கார்ட் ஆகியிருக்கும்.

எழுந்து மெதுவாக நடந்தார்.

ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தார்.

வாசலில் வினோத் அனுப்பிய பாதுகாப்பு ஆட்கள் நின்றிருந்தார்கள்.

அந்த விஷயத்தில் வினோத் கெட்டிகாரனாக இருந்தான்.

"உங்களை ஒருத்தரும் எதுவும் செய்துவிட முடியாது!" என்றான் அவன்.

அதுபோலத்தான் அவனுக்குப் பாதுகாப்புக் கொடுத்திருந்தான்.

திரும்பவும் வந்து சோபாவில் அமர்ந்தான்.

வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம்.

சிறிது நேரத்தில் ரீடா மேலே வந்தாள்.

"சார் வணக்கம்!" என்று சொல்லி எதிரே உட்கார்ந்தாள்.

அவள் முகம் ஒரு புன்னகைக் காடு!

"ரீடா ஏதாவது விஷயம் உண்டா?"

"ஒன்றுமில்லை சார்!"

"ரெஸ்டாரண்டில் யாராவது புது ஆசாமி தென்பட்டார்களா?"

"இல்லை சார்!"

நவீன் ஒரு சாய்வாக ரீடாவைப் பார்த்தார்.

ஒரு துண்டு புது ஜீவன் போல அவள் இருந்தாள்.

துளி கவலை இல்லை.

எதையும் அஞ்சவில்லை, அலறவில்லை.

ஒரு முழு வாழ்வுப் பொருளை அவளிடம் காண்பது போல் இருந்தது.

"ரீடா!" என்றார்.

"எஸ் சார்!"

"தினம் காலையிலும், மாலையிலும் இங்கே வந்துவிடு!"

"ஓ! வரேன் சார்!"

"உன்னைப் பார்த்தால் எனக்கு பலம் ஏற்படுகிறது!"

ஒரு புன்னகை.

"ஒரு தெம்பு ஏற்படுகிறது!"

ஒரு முறுவல்.

"வாழ்க்கையில் எத்தனையோ தவறுகளைச் செய்துட்டேன்!"

"......"

"இவ்வளவு பணம்படைத்து என்ன பிரயோசனம்?"

"......"

"உன்னைப் போன்று ஒரு முழு ஜீவப் பொருளாக என்னால் இருக்க முடியவில்லை பார்! வீட்டுக்குள் ஒளிஞ்சுட்டுக் கிடக்கிறேன்."

"அதெல்லாம் ஒண்ணுமில்லை சார்!"

"ஆச்சரியப்படுவே! உன்னைப் பார்த்த பிறகுதான் இந்த ஹாலிலே என்னால் உலாவ முடிகிறது... மனசில் அவ்வளவு சஞ்சலம்."

"சார்! பேப்பர் பார்த்திங்களா?"

"இல்லையே! அதை எடு!"

காலையிலிருந்து பேப்பர் பிரிக்கப்படாமல் இருந்தது.

பக்கங்களைப் புரட்ட ஆரம்பித்தார். மூன்றாம் பக்கம் வந்ததும் கவனம் சுளிராக இழுபட்டது.

நேற்று மாலையில் பிரபல லாரி சர்வீஸ் சொந்தக்காரர் நாராயணன் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சுமார் ஆறு மணி அளவில் மூன்று பேர் அவர் வீட்டுக்குள் புகுந்து நாராயணனை சுட்டனர்.

காரணம் தெரியவில்லை.

வீட்டில் உள்ள எந்தப் பொருளையும் அவர்கள் எடுத்துச் செல்லவில்லை.



முன்பகை ஏதாவது இருக்கும் என்று கூறப்படுகிறது.

போலீசார் புலன் விசாரித்து வருகிறார்கள்.

அருகில் நாராயணனது போட்டோ பிரசுரிக்கப்பட்டிருந்தது.

அதை ஒரு பார்வை பார்த்தான். பிறகு சற்று அழுத்திப் பார்த்தான்.

மோசமான காகிதம் சரியாக படம் அச்சாகவில்லை.

எனினும் அந்த விநாடி அவர் மனசுள் ஒரு நாடி சுண்டி இழுத்தது.

சற்று வெளிச்சத்தில் திருப்பி படத்தை பார்த்தார்.

"ரீடா!" என்றார்.

குரலில் பதட்டம்!

எழுந்து வந்தாள்.

பேப்பரை வாங்கினாள்.

அந்தச் செய்தியை படித்தாள்.

"இதென்ன சொல்றீங்க சார்!"

"இது... இது... எங்க கும்பல்லே ஒருத்தன்னு தோணுது! நிச்சயமா அவனாத்தான் இருக்கணும்."

"யாரு?"

"நட்டுன்னு ஒருத்தன். அவன் பேர் நாராயணன்."

"ஓ!" என்று சொல்லி நிறுத்தினாள் அவள்.

"அவன் லாரி ஓட்டறவன்தான். சொல்லப் போனா, எங்க கொள்ளை நடந்த அன்னிக்கு அவன்தான் எங்க வேனை ஓட்டியது. இப்போ பெரிய லாரி சர்வீஸ் வைச்சிருக்கான் போல இருக்கு. அவன் கொல்லப் பட்டான்னா? அவனையும் பிளாக்மெயில் பண்ணி இருக்காங்க! அப்புறம் சுட்டுப் போட்டிருப்பார்கள்.

அவன் ஒரு முறுவலை மிதக்கவிட்டான்.

"சார்! நீங்க அனாவசியத்துக்கு கவலைப்படாதீர்கள்!"

"இனி வினோத்தை உடனே கூப்பிடணும்! ரீடா..."

## 20

ரீடா போனை எடுத்தாள். பேசினாள். வினோத் வெளியே போயிருக்கிறார் என்று கூறினார்கள்.

"ஐயோ! என்ன ரீடா?" என்றான் நவீன்.

"இருங்க. வந்துடுவார்! இப்போ நீங்க அப்செட் ஆயிட்டீங்க. இது கூடாது!" என்று சொன்ன ரீடா சட்டென்று எழுந்து ஒரு ஸ்விட்சை அழுத்தினாள்.

அறை வாசலில் அது சிவப்பு வெளிச்சம் அடிக்கும்! அதைப் பார்த்தால் அறையுள் நவீன் பிஸியாக இருக்கிறார், யாரும் வரவேண்டாம்

என்பதை உணர்த்திவிடும்.

இன்னும் இரண்டு சுவிட்சுகள். ஒன்று அறைக் கதவைத் தாளிட்டது. மற்றொன்று, விளக்குகளை அணைத்துவிட்டு, ஒரு இளம் நீல வெளிச்சத்தை பாதி ராத்திரி வேளை போல் காண்பித்தது.

"நவீன்!" என்று தாவி அவன் மீது அழுத்தினாள்.

"ரீடா! நில்லு! இது பகல் நேரம்!" என்றான் நவீன்.

உண்மையில் அவளிடம் ஏற்கெனவே சுகம் கண்டுகொண்டவன்.

மீண்டும் மனம் அதற்கு ஏங்கித் தவித்தது.

ரீடா அந்த முன் சம்பவத்தை ஏதோ ஒரு ஏதேச்சை நிகழ்ச்சி என்று ஒதுக்கிவிட்டிருப்பாள் என்று நவீன் நினைத்திருந்தான்.

ஆனாலும் மனசு 'அதை மீண்டும் பெறுவோமா, பெறுவோமா?' என்று ரீங்கரித்துக்கொண்டிருந்தான்.

இப்போது அவளே தனது இச்சையில்...

அவன் அருகே அமர்ந்தாள்.

ஒவ்வொன்றாக ஒவ்வொருவர் ஆடையும் மெத்தையின் இருபுறங்களிலும் பறந்தன.

முதலில் மசாஜை ஆரம்பித்தாள்.

முறையான மசாஜ் இல்லை.

இதில் அழுத்தமோ, அமுக்கவோ இல்லை.

மயில் இறகால் வருடுவது போல இருந்தது.

இறகு எங்கிருந்து வந்தது.

கண்களை மூடியவன் மெள்ளத் திறந்து பார்த்தபோது, அவள் தன் விரல்களால்தான் அந்த மிருதுவில் நீவிக்கொண்டிருந்தாள்.

வசமான இடங்களில் தனது மெல்லிய நாவையும் உபயோகப்படுத்தி இருந்தாள்.

அவரது பிடரிகளில் அது பூப்போல் வருடியது. அவரது செவிகளை மிருதுவாகச் சுவைத்தது. உதடுக்காகக் கவ்வி பிடித்தது.

முகவாயையும், மூக்கையும், கண் இமைகளையும் அது ஈரமாக்கியது.

அதே சமயம்,

விரல்களும் அவள் தோள் மீதும், மார்பு மீதும் சுருதி கூட்டுவது போல மென்மையாக வருடிக்கொண்டு சென்றன.

சில இடங்களில் தசையை மெள்ளமாகப் பிசைந்து பார்த்தன.

நவீனுக்கு ஒன்று தெரிந்தது.

அடேயப்பா! வன்மை சிறிதும் இல்லாமல், பலம் காட்டாமல் முரட்டு உணர்வு காட்டாமல்,

இப்படி மென்மையாக அவன் உடம்பைக் கலக்கியே பரவசங்களை லயம் லயமாகக் கூட்ட முடிகிறதே!



# இதயம் பேசுகிறது!

**நாவலைப் படித்துவிட்டு, உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்புங்கள். முகவரி: இதயம் பேசுகிறது, "ராணி முத்து" சென்னை - 600 007.**

## நினைவில் நிற்கும் நாவல்

சுபாவின் "புதிராய் ஒரு புன்னகை" நாவலில், நண்பன் வெங்கட்டிற்காகத் தனது பொன்னான வாழ்வையே இழந்த கல்யாணைப் பற்றிப் படித்தபோது, இப்படிப்பட்ட உன்னதமான நட்பையும் உலகில் காணமுடியுமா? என்று வியந்தே போனேன்!

*தி. ஸ்ரீசற்குரு, சென்னை.*

அரவிந்தனைப் போல் ஒவ்வொரு போலீஸ்காரர்களும் கடமை உணர்வோடு இருந்தால் நிச்சயம் குற்றவாளிகள் தப்பிக்க முடியாது!

*காசி. நடராஜன், பரங்கிப்பேட்டை.*

மர்மத்திற்கு மேல் மர்மம்– புதிருக்கு மேல் புதிர் என்று "புதிராய் ஒரு புன்னகை" நாவலை விறுவிறுப்புக் குன்றாமல் தந்திருப்பதை படித்துவிட்டு திருப்தியுடன் புன்னகை புரியாமல் இருக்க முடியவில்லை!

*இரணியல் 'கலை', குமரிமாவட்டம்.*

சுபாவின் 'புதிராய் ஒரு புன்னகை' நாவல் ஒன்பது அத்தியாயங்களும் துப்பாக்கியிலிருந்து பீறிட்ட தோட்டா போல படுவேகத்தில் சென்றது!

*சு.மு. சுரேஷ், அரைக்கால்கரை.*

"புதிராய் ஒரு புன்னகை" புதுமையாய் இருந்தது. சரத்குமாரும், விஜய்காந்தும் இணைந்து நடித்த விறுவிறுப்பான திரைப்படம் பார்ப்பது போல் விறுவிறுப்பாகக் கதையைப் படைத்து அசத்திவிட்டார் சுபா!

*த. சத்தியநாராயணன், அயன்புரம்.*

ரம்பாவின் புன்னகையில் புனிதமிருக்க, சுபாவின் எழுத்தில் 'புதிராய் ஒரு புன்னகை' விடுவிக்க இயலாத மர்மமாய் இருந்தது.

*ப. ராமகிருஷ்ணன், காயக்காடு.*

அனுராதாரமணன் 'எப்போதும் நீ' படித்தேன். மிக அருமையான குடும்ப நாவல். எதிர்பாராத முடிவு மிகவும் அருமை.

*ப. சரவணன், உத்தமபாளையம்.*

அனுராதாரமணன் நாவல் என்றாலே தனி சுகம் இருக்கும்; தவிப்பு இருக்கும்; சிக்கலான பிரச்சினைகளுக்கு தீர்வு இருக்கும். அந்த வகையில் 'எப்போதும் நீ' நாவலும் சோடை போகவில்லை.

*எஸ். குப்பன், கொடைக்கல்.*

குடும்பக் கதையைக்கூட மிக விறுவிறுப்பாகத் தரமுடியும் என்பதை 'எப்போதும் நீ' நாவல் மூலம் நிரூபித்துவிட்டார் அனுராதாரமணன். பூமா என்றென்றும் என் மனத்தேரில் உலா வருவாள்! பாராட்டுகள்!!

*லதா பிரகாஷ், சோளிங்கர்.*

இல்லறத்துத் திருமகளின் இலக்கிய தாகம்... இதனை கருவாக்கி- இதயம் தொடும் நாவல் படைத்து அசத்திவிட்டார் அனுராதாரமணன். 'எப்போதும் நீ' என்றும் நினைவில் நிற்கிற வித்தியாசமான நாவல்!

*திவ்யா, சென்னை.*

உடம்பில் எல்லா நரம்புகளும் கண் திறந்தது போல விழித்துவிட்டனவே!

இப்படியும் நடக்குமா என்று ஆச்சரியப்பட வைக்கிறதே!

இத்தனை அருமையாக முன் விளையாட்டுக் கலைகளை இவள் அறிந்து வைத்திருக்கிறாளே!

உடம்பில் இப்படிப் புதுமையான, விதவிதமான பரவசங்கள் இருப்பதே இத்தனை நாள் தெரியாமல் இருந்ததே என்று நினைத்தான்.

உடம்பு முழுதும் அதே இறகு மென்மைகள் பதிந்தும், வழிந்தும் ஓடின.

சில சமயம் வருடியும் முத்தமிட்டும் ஓடின.

அரை மணி, முக்கால் மணியாக ஓடியதே தெரியவில்லை.

பிறகு சாந்த சொருபமாக,

ஆவேசம் கிளறவிடாமல் அவன் மீது படிந்துகொண்டாள்.

அந்தச் சங்கமம் அவனை நினைத்தறியாத புது இன்ப உயரங்களுக்கு அழைத்து சென்றது.

## 21

**யா**வும் முடிந்து, சூடாக ஒரு பானம் பருகிய பிறகு.

"ரீடா!" என்றான், அன்புத் தழுதழுக்க.

ஒரு நாணம் நிறைந்த பெண் போல் சேலையில் அவன்முன் வந்து நின்றாள்.

அறை இப்போது விளக்குகளுடன் வெளிச்சமயமாகி இருந்தது.

"என் மனம் அமைதி ஆயிடுச்சு. ஒரு நிசப்தக் கடல் போல் அது கிடக்கு! உனக்கு ரொம்பக் கடமைப்பட்டிருக்கேன்!" என்று அவளது கைகளைப் பற்றினான்.

அவனருகே உட்கார்ந்ததும், அவள் கனிந்த பார்வையோடு அவனைப் பார்த்தாள்.

அவள் கண்கள் சிறிது கலங்கி இருந்தன.

சுற்றிலும் விழியோரம் நீர் சுரந்து தேங்கிவிட்டது.

"ஏன் ரீடா?"

"ஒன்றுமில்லை நவீன்! வாழ்க்கை எங்கெங்கோ போய் என்னென்னவோ நல்லது பொல்லாதது கற்று கடைசியில் ஒரு சந்தர்ப்பத்தில் இங்கே உங்க முன்னாடி வந்து நிக்கறேன்."

தயங்கினாள்.

தொடர்ந்தாள்.

"வேறு ஒண்ணும் எனக்கு வாழ்க்கையில் வேண்டாம்! அது என்ன உறவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். ஆனால் உங்களோடயே மட்டும் இந்த உறவு இருந்தா அதுவே எனக்குப் போதும்னு தோணுது.



எனக்கு நல்ல மன உணர்வுகள் உண்டு. மென்மையான மனித உணர்ச்சி உண்டு" என்றாள்.

அவள் கண்ணிலிருந்து இரண்டு பொட்டுகள் கீழே உதிர்ந்தன.

அவன் அவளை அணைத்துக்கொண்டான்.

## 22

**ஏ**ற்கெனவே அந்த திருமணத்தூர் கேஸ் மனதில் அச்சாகப் பதிந்திருந்தது. ஒவ்வொரு கணமும் அதைப்பற்றி ஏதாவது ஒரு சிந்தனை அவர் மனதில் ஓடிக்கொண்டே இருந்தது.

அன்று காலை பேப்பரின் மூன்றாவது பக்கத்தைப் பார்த்ததும், பளிச் என்று ஒரு வெளிச்சம் அடித்தது. ஆபீஸ் போகும்வரை அவரது ஆர்வம் தாங்கவில்லை.

போனதுதான் தாமதம். "லிங்க்!" என்றார்.

"எஸ் சார்!"

"பதினைந்து வருடத்திய கேஸ்! அந்தப் பேப்பர் தேடி எடுத்துக் கொண்டு வந்தியே எது எங்கே?"

லிங்க் மறைந்தான். திரும்ப வந்தபோது பழைய சுதேசமித்திரன் பேப்பரைக் கொணர்ந்தான்.

சிங் அவசரமாகப் பிரித்து அந்த நாலாம் பக்கத்தைப் பார்த்தார்.

திருமணத்தூர் கேஸில் கைது செய்யப்பட்ட ஐந்து பேர்களையும் சேர்த்தாற்போல் படம்பிடித்து போட்டிருந்தது.

சாதாரண நியூஸ் பிரிண்ட் ஏற்கெனவே அச்சடிப்பின் திறன் குறைவு.

பதினைந்து வருடங்கள் ஆகிவிட்டதால் மேலும் மட்கிவிட்டது.

சிங் அந்த இரண்டு படங்களை ஒப்பு நோக்கினார்.

சிங் தவிப்பான நிமிடங்கள் போனபிறகு, "லிங்க்!" என்றார்.

"எஸ் சார்!"

"இதைப் பாரு!"

லிங்க் சிறிதுநேரம் செலவழித்தான்.

"ரைட் சார்! பதினைந்து வருட வித்தியாசம்!"

"பழைய பேப்பரில் 'நட்டு'ன்னு பேர் போட்டிருக்கிறவனும், இன்னிக்குப் பேப்பர்லே 'நாராயணன்'னு போட்டிருக்கிறதும் ஒரே ஆள்! சரியா?"

"சரிதான்!"

"அந்த ஒரு கண் மட்டும் தூக்கிட்டு தெரியுது பார்! அதுதான் முக்கிய அடையாளம்!"

"எஸ் சார்!"

"அது ஒருவித ஒன்றரைக் கண்ணிலே சேர்ந்தது!"

"ரைட் சார்! இது பெரிய கண்டுபிடிப்பு!"

"ஒத்துக்கறேன்! லிங்க் ஆனா ஆள் இறந்தப்புறம் இந்தக் கண்டுபிடிப்பு! உயிரோடு இருந்தா விசாரிச்சிருக்கலாம்! ரொம்ப பயன்பட்டிருப்பான்!"

"பரவாயில்லை. சார்! நமக்கு இப்போ ஒரு விலாசமாவது கிடைச்சுதே!"

"ரைட்! இப்போ லிங்க்! முதல்லே நாராயணன் வீட்டைக் கண்காணிக்கணும், யார் யார் வரான்னு தெரியணும்! ஏற்பாடு பண்ண முடியுமா?"

"எஸ் சார்!"

"நல்ல ஆளா உதவிக்குச் சேர்த்துக்க!"

"எஸ் சார்!"

லிங்கை அனுப்பிவிட்டு அடுத்து சிங் போனை எடுத்தார்.

பிராந்திய இன்ஸ்பெக்டரைக் கூப்பிட்டார். "சிங் பேசறேன்!" என்று அறிமுகம் செய்தார்.

"இன்ஸ்பெக்டர் கதிர் பேசறேன் சார்! குட்மார்னிங்!"

"இந்த நாராயணன் கொலை இல்லே?"

"ஆமாம் சார்!"

"அதில் எங்க பிராஞ்சுல கொஞ்சம் அக்கறை இருக்கு! அதனால் அதில் ஏதாவது புதுத் தகவல் தெரிஞ்சுதுன்னா எங்களுக்கும் சொல்லுங்க! தவிர, இந்தக் கேஸை நாங்களும் எங்க கோணத்தில் விசாரிக்கிறோம்!"

"எஸ் சார்!"

மாலை மணி ஐந்துக்குத்தான் லிங்க் திரும்பி வந்தான்.

வெய்யிலில் வியர்த்திருந்தான். கறுத்த முகத்துடன் உள்ளே வந்து 'உஸ் உஸ்' என்று மூச்சுவிட்டான்.

"என்ன லிங்க்?"

"சார்! நாராயணன் வீட்டுப் பக்கம் போயிருந்தேன். இவ்வளவு மோசமா ஒரு சவ ஊர்வலம் பார்த்ததில்லை!"

"ஏன்? என்னாச்சு?"

"எண்ணி 10 பேர் இருந்திருப்பாங்க! ஏழை வீட்டு பாடை போறாப் போலே போச்சு!"

"யாராவது குறிப்பிடும்படி..."

"அப்படி யாரும் இல்லை சார்!"

சிங் யோசித்தார்.

பிறகு, "லிங்க்! எல்லாரும் மறைஞ்சுக்கிட்டாங்க!"

"அப்படியா சார்!"

"ஆமாம்! ஊர்வலத்திற்கு வந்தா ஆபத்துன்னு தெரியும்."

"ரைட் சார்!"

"இப்போ இதுவே நமக்கு காட்டுது இது ஒரு மர்மக் கேசுன்னு!"

"அப்போ விசாரிச்சுட வேண்டியதுதான்!"



# 23

"அம்மா! உங்க கணவர் என்ன வியாபாரம் செய்தார் தெரியுமா?" என்றார் சிங்!

கேட்ட கேள்வியை அந்த முப்பது வயது மெள்ள கிரகித்துக் கொண்டாள்.

அவள் கண்கள் சோர்ந்திருந்தன. வந்தவரையும் பிரமிப்புடன் பார்த்தாள்.

வீட்டுக்குள்ளேயே இருந்ததினால் நிறம் வெளிறி இருந்தாள்.

"லெதர் எக்ஸ்போர்ட் பண்ணினாரு சார்!"

"அதில் யாராவது விரோதிங்க உண்டா?"

"சார் இப்பல்லாம் விரோதியே கிடையாது. அவ்வளவு நல்லவரா இருந்தாரு."

"ஏம்மா! இப்போ இல்லாட்டி முன்னாடி உண்டா?"

"ரொம்ப காலத்துக்கு முன்னாடி உண்டுன்னு இவரே சொல்லியிருக்காரு!"

"அப்போ நாராயணன் என்ன செய்திட்டிருந்தாரு?"

"தெரியாது சார்! அப்போ எங்க கல்யாணம் ஆகலை. அப்பவும் என்னவோ கமிஷன் வியாபாரம் நடத்தினேன்னு சொன்னாரு!"

"அதிலே விரோதி உண்டுங்களா?"

"அப்போ இருந்தாங்க சார்! இப்போ கிடையாது சார்!"

"இந்தாம்மா! இப்போ இல்லாமே எப்படி வந்து கொலை செஞ்சாங்க?"

நாராயணனின் மனைவி அவள். சசிரேகா என்று பெயர். அவள் ஒரு நடனக்காரியாக இருந்திருக்கலாம்.

கண்கள் இரண்டு பக்கமே நீந்தின.

திரும்பினால்கூட அதில் ஒயில் அடித்தது.

அவளது யவ்வனம் முழுதும் போகவில்லை!

இந்த சோகத்தில் கூட நல்ல வனப்பைக் காட்டினாள்.

அவளால் சிங் கேள்விக்கு பதில் சொல்ல முடியவில்லை.

சிங் எழுந்தார். வீட்டைச் சுற்றி பார்க்க அனுமதி கேட்டார்.

முதல் அறையில் சில மூடிய அலமாரிகள் இருந்தன.

"இந்த அலமாரியில் என்ன இருக்கு?"

"அதை எல்லாம் பார்த்து இன்ஸ்பெக்டர் கதிர் எடுத்துட்டுப் போயிட்டாருங்க!"

"ஓகோ, ரைட்! உங்க பிஸினஸ் நடக்கிற இடம் எங்கே?"



"வீட்டில்தான்!"

சிங்கின் கண் துள்ளிற்று.

"இப்போது சரக்குங்க எங்கே இருக்கு?"

"கையிலே வைச்சுக்கமாட்டாருங்க! ஒருத்தர்கிட்டே வாங்கி வெளிக்கைக்கு கொடுத்திடுவாரு!"

"சரி மேடம்! இங்கே அவருக்கு உதவி ஆள் யாருமில்லையா?"

"உண்டு சார்! அவர் பேரு காந்தன்! என் கணவர் இறந்ததிலேர்ந்து வீட்டுக்கு வரலீங்க! என்ன ஆனார் என்று தெரியாது!"

"அட்ரஸ் தெரியுமா?"

"அந்த இன்ஸ்பெக்டருக்கு கூட கொடுத்தேன். உங்களுக்கும் தர்றேன்!"

உள்ளே போய் ஒரு காகிதத்தாளை எழுதிக் கொணர்ந்தான்.

## 24

இன்ஸ்பெக்டர் கதிர் வந்திருந்தார். சிங்குக்கு ஒரு சல்யூட் அடித்தார்.

"வாங்க! போகலாம்!" என்றார் சிங்!

ஜீப்பில் புறப்பட்டார்கள்.

டர்னாத் தெருவை அடைந்து வாகனத்தை நிறுத்தினார்கள்.

அங்கே உள்ள சந்தில் புகுந்து அங்கே தெரிந்த மாடிப்படிகள் ஏறினார்கள்.

காந்தனின் அறை பூட்டப்பட்டிருந்தது.

"உடைச்சிடலாமா?" என்றார் கதிர்.

"உடைக்கவேண்டியதுதான்!"

"ஏற்கனவே வந்து பார்த்துட்டுப் போயிட்டேன். அவர் எப்படியும் திரும்பி வருவார்னு பார்த்தேன்" என்றார் கதிர்.

ஒரு கான்ஸ்டபிளிடம் கண்ணைக் காட்ட அவர் முன்னால் ஒரு சுத்தியலால் ஒரு போடு போட்டார்.

அடி பூட்டிலிருந்து அது கழன்று விழுந்தது.

திறந்து உள்ளே போனார்கள்.

ஒரு ஊதுபத்தியின் நெடி இன்னும் தங்கியிருந்தது.

அறை பெரிதாக இருந்தது.

அதை ஒட்டி பாத்ரூம்!

சாமான்கள் அலங்கோலமாக இருந்தன.

ஒரு கொடியில் லுங்கியும், பனியன்களும், கத்தையாகத் தொங்கிக் கொண்டிருந்தன.

அழகிகளின் காலண்டர்கள் மூன்று தொங்கின.

மேஜை மீது ஒரு கடிகாரம்.

உள்ளே ஒரு பெட்டி பூட்டியபடி இருக்க, ஒரு சின்ன இரும்பு பீரோ அருகில் நின்றுகொண்டிருந்தது.

அதன் கைப்பிடியை பிடித்தார் சிங்!

தொட்டதும் திறந்தது!

உள்ளே பார்க்கும்போதுதான் துணிகளாக இருந்தன.

முக்காலும் அழுக்குத் துணிகள்.

காந்தன் ஒரு ஒழுங்கான ஆள் அல்ல என்பது தெரிந்தது.

முதல்தட்டில் உண்டான துணிகளைத் தள்ளினார்.

ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தபோது, எதுவும் கிடைக்கவில்லை.

மேஜை அருகே சென்றார். நாற்காலியில் உட்கார்ந்து டிராயரைத் திறந்தார்.

சற்று சிரமத்துடன் திறந்தது. உள்ளே பார்க்கும்போது ஏராளமாகக் காகிதங்கள் தெரிந்தது.

ஒரு சின்ன டைரி இருந்தது. இரண்டு நோட்புக்குகளும் இருந்தன.

எடுத்துப் பார்த்தார். நோட்டில் நிறையப் பாடல்கள் எழுதப்பட்டிருந்தன.

நவீனப் பாடல்கள்.

எதுகைமோனை இல்லாமல் வெட்டி வைத்த வாக்கியங்களாக இருந்தன.

மூடி வைத்தார். டைரியை எடுத்தார்.

அதை புரட்டும்போது உள்ளே எதுவும் எழுதப்படவில்லை என்பது தெரிந்தது.

அதற்குப் பதிலாக விலாசங்கள் நிறைய குறிக்கப்பட்டிருந்தன.

ஆ! என்று சொல்லி அதில் ஆழ்ந்தார்.

ஒவ்வொரு பக்கமாக முடித்துவிட்டு ஒரு பெருமூச்சுவிட்டார்.

இது ஒரு நல்ல தடயம். சில சாகசங்கள் செய்யலாம் இதை வைத்து என்று நினைத்தார்.

"கதிர்! இதைப் பாருங்க!" என்று கூறினார்.

அவரும் டைரியைப் பார்த்துவிட்டு திருப்பி கொடுத்தார்.

"இந்த விலாசங்களிலே தேடினால் ஏதாவது தென்படும்!" என்று கூறினார் சிங்!

டைரியின் காலித்கோப் பகுதி ஏதோ கனத்தது போல் தெரிந்தது.

இப்பொழுது அந்த காலிகோ ஜாக்கெட்டைக் கழற்றிப் பார்த்தார்.

ஒரு அழகியின் போட்டோ!

24 வயது இருக்கும். கண்கள் மொட்டுகளாகப் பார்த்தன.

போட்டோவைத் திருப்பிப் பார்த்தார்.

அதில் அசலா என்று எழுதியிருந்தது.




# கோலப் போட்டி

ஒவ்வொரு கோலத்துக்கும் ரூ. 100 பரிசு! அனுப்பவேண்டிய முகவரி: கோலப்போட்டி, "ராணி முத்து", சென்னை–600 007.

**பரிசுபெற்ற கோலம்:**


## ஊட்டி ரோஜா கோலம்



**17** புள்ளி 9–ல் நிற்க. (இடைப்புள்ளி)

–ராதா கிருஷ்ணராஜன், சென்னை.


## தீப கோலம்



1 முதல் 21 வரை (நேர்புள்ளி)

—ஆர். சோபியா, தூத்துக்குடி.

## பொம்மைக் கோலம்



21 புள்ளி, 3 வரிசை, 3—ல் நிற்க. (நேர்புள்ளி)

—என். தனலெட்சுமி, திருச்சி.



கதிரிடம் கொடுத்தார்.

கதிருக்கு ஐம்பது வயது இருக்கும். மீசையும், தலையும் நரைத்து விட்டது.

கண்களில் ஒரு மங்கிய பார்வை.

எனினும்— "குட்டி தேவதையே!" என்றார்.

ஒரு சிரிப்பு ஒன்று வந்தது.

சத்தமில்லாமல் கரைந்தது.

சிங் உடனே யோசனையுடன் டைரியைப் புரட்டினார்.

பல பக்கங்களைத் திருப்பிய பிறகு அசலாவின் விலாசம் குறிக்கப்பட்டிருந்தது.

32, மதுரம் கார்டன்! என்று போட்டிருந்தது.

டைரியைப் பையில் போட்டுக்கொண்டார்.

"விங்க்!" என்றார்.

"எஸ் சார்!"

"டிராயரில் இருக்கிற மீதியெல்லாம் பார்த்துடு!" என்றார்.

சிங் எழுந்திருந்தார்.

திரும்பவும் அந்த அறையை சுற்றிவந்தார்.

சுவர்களையெல்லாம் பார்த்தார்.

பிறகு ஒரு ஓரத்தில் நின்றுகொண்டார்.

"என்ன மிஸ்டர் கதிர்! என்ன நடந்திருக்கும் என்று நினைக்கறீங்க?"

"எனக்கு புரியலை!"

"ஒருவேளை காந்தன்தான் நாராயணனை குளோஸ் பண்ணியிருப்பானோ?" என்றார்.

கதிர் பதில் பேசவில்லை.

"அல்லது அவரை குளோஸ் பண்ணுவதற்கு உடந்தையாக இருப்பானோ?"

அதற்கும் கதிர் பேசவில்லை.

"அல்லது இவனையே யாராவது குளோஸ் பண்ணிவிட்டார்களா?"

சிங் திரும்பினார்.

விங்க் அதற்குள் எல்லாக் காகிதங்களையும் புரட்டிப் பார்த்திருந்தான்.

எதுவும் இல்லை என்று கூறிவிட்டு டிராயரை உள்ளே தள்ளினான்.

இடுப்பின் பகுதியில் ஒரு கிழிசலுக்கு அருகில் எதுவோ துருத்திக் கொண்டிருந்தது.

டார்ச்சைப் பாய்ச்சினார்.

"லெட்டர் போல இருக்கு? அரைக்கயிறிலே முடிஞ்சு வைச்சிருக்கு!"

சிங் அவசரமாக பக்கங்களில் தேடினார். நீண்டகுச்சி கிடைத்தது. கையில் எடுத்து நீட்டி கிழிசலுக்குள் செலுத்தினார்.

பிறகு அப்படி இப்படி புரட்டி, கிழிசல் வாயைப் பெரிதாக்கி,

அதை அந்த அரைக் கயிற்றிலிருந்து கழற்றுவது சற்று சிரமம் கொடுத்தது.

இருப்பினும் அவரால் அதை மெள்ளத் தவிர்க்க முடிந்தது.

ஜீஷே அதைத் தள்ளி, பிறகு குச்சியால் தென்னித் தென்னி தமது அருகே கொண்டுவந்தார்.

"லிங்க்! ஒரு காய்ஞ்ச இலையை எடுத்து கடிதத்தை மடிச்சுப் பிடிச்சு எடுத்துக்க!" என்றார்.

"எஸ் சார்!"

## 25

அசலா சிரித்த சிரிப்பைப் பார்த்தார். வாழ்க்கை அத்தனையுமே மகிழ்ச்சிப் பூங்காவாகத் தோன்ற வேண்டும்.

இளம் பெண்!

மினுக்கும் மேனி!

கண்கள் சுருக்கென்று குத்தித்தான் பார்த்தன.

கன்னத்தில் எப்போதும் ஒரு குழி.

அரைவிநாடி சும்மா இல்லாமல் ஏதாவது செய்துகொண்டே இருந்தாள்.

காந்தன் எங்கே என்று கேட்டதற்கு,

"ஏன் காணவில்லையா? அதானே பார்த்தேன், இங்கே ரெண்டு நாளாய் வரவில்லை!" என்றாள்.

"சிங் தமது சாதாரண உடையில் எந்த உணர்ச்சியையும் காட்டாமல் இருந்தார்.

அவளது அறை ஒரு சினிமா செட் போல் தென்பட்டது.

அவளது உடம்பு வனப்பைப் பார்த்தால் யார் மனசும் ஒரு முறையாவது கிறங்கும்.

"கடைசியா இங்கே எப்போ வந்தாரம்மா?"

"போன சனிக்கிழமை!"

"அப்போ எதாவது சொன்னாரா?"

"எல்லா ஆண்பிள்ளையும் சொல்றதைச் சொன்னார்! இன்னும் கொஞ்ச நாள் ஆகட்டும் பாரு! உன்னை ராணி போல ஆக்கிடுவேன்னார்!"

"வேறே ஏதாவது சொந்த விசயமா?"

"அதுங்களா? அவர் எஜமானார் ஒரு கருமின்னு சொல்லியிருக்கார்."

"வேறே என்ன சொன்னார்?"

"அவர் சம்பாதிக்கிறதெல்லாம் ஏமாற்று வழின்னு சொல்லியிருக்கார்."

"அப்படியா? அப்போ அதிலே சண்டை சச்சரவு எல்லாம்



வந்திருக்கணும்!"

"ஆமா சார்! நீங்க சொன்ன அப்புறம் ஞாபகம் வருது! ஒருநாள் லேட்டா வந்தாரு! ஏன்னு கேட்டா முதலாளிக்குத் துணை போனேன்னாரு!"

"எங்கே போனாரு?"

"கடற்கரை பக்கத்தில் ஒரு பங்களா அற்புதமா இருக்குதுன்னு சொன்னாரு!"

"அங்கே யாரைப் பார்த்தாரு?"

"இவர் வாசல்லே நின்னாரு! இவர் முதலாளிதான் உள்ளே போனாராம்! திரும்பி வந்தபோது அவர் முகமே மாறியிருந்திச்சு! என் ஆயுசிலே அவர் இந்த மாதிரி பயப்படற முகத்தோடு இருந்ததைப் பார்த்ததில்லை'ன்னு சொன்னார்."

"ஏதாவது பேர் சொன்னாரா?"

"இல்லை சார்!"

"காந்தன் சுபாவத்திலே எப்படி?"

"நல்லவர்தான்!"

"கல்யாணம் ஆகலையா?"

"இல்லை! பெத்தவங்க கிராமத்தில் இருக்கிறதாச் சொன்னாரு!"

"உங்ககிட்ட எவ்வளவு பணம் செலவழிப்பாரு?"

அவள் திகைத்தாள்.

"இந்தா பாரு அசலா! ஏற்கெனவே நாங்க எந்த டிபார்ட்மெண்ட்ன்னு சொல்லிட்டோம்! நீங்க உண்மையை..."

"இல்லை சார்! நீங்க என்னை எதிலேயாவது மாட்டி விடுவீங்களோன்னு..."

"பயப்படாதீங்க! அதுக்கு நான் உறுதி!"

"ரெண்டாயிரம், மூவாயிரம் செலவழிப்பாரு!"

"அவ்வளவு முடியுமா?"

"அதிலே இரகசியம் இருக்கு சார்!"

"என்ன?"

"நாராயணன் மனைவிக்கு காந்தன் மேலே பிரியம்!"

"வெறும் பிரியந்தானே?"

"மனைவிக்கு கணவன் மேலே இருக்கிற பிரியம்! காந்தன் இல்லாட்டி இரண்டு நாள் அவள் தாங்கமாட்டா!"

"ஓ! புரியுது!"

"இந்தப் பணம் அவள் கொடுக்கிறதுதான்!"

"சரி! நாராயணன் பற்றி வேறே எதுவும் சொன்னாளா?"

"இல்லை சார்!"

# 26

முல்லை வில்லாவில் சிங் வந்து நின்றார்.

கடல் சற்று தூரத்தில் இருந்தது.

அதன் மெல்லிய அரவம் ஒரு சுருதியாகக் கேட்டது.

இப்போது பங்களாவை போலீசார் சீல் வைத்திருந்தார்கள்.

மெல்லிதான இளம் காற்று அவரை துவட்டியவாறு சென்றது.

ஆனால் இனிமையை அனுபவிக்க வேண்டிய நேரமல்ல அது.

அங்கே ஏதாவது கிடைக்குமா?

அந்த வேட்டையில்தான் அவர் அங்கே வந்திருக்கிறார்!

கொலை நடந்த தலமானால் ஒருதரம் அல்ல பலதரம் விஜயம் செய்பவர் அவர்.

அதன்மூலம் புதிதாக ஏதாவது கிடைக்கும்!

அல்லது எண்ணத்தில் புதுக் கோணமாவது பிறக்கும்.

அத்தனை புலன்களையும் புலன் விசாரிப்பில் இறக்கி, ஒரு ஆராய்ச்சி மனப்பான்மையோடு அங்கே நின்றார்.

அங்கங்கே பார்வை வழிந்து சென்றது.

வெறும் சூன்யத்திலிருந்தே எதையாவது கிரகித்துவிட நினைப்பவர் போல் நின்றார்.

அவரை தமது பாட்டில் விட்டுவிட்டு லிங்க் விசுவாசமாக வேறு திசையைப் பார்த்திருந்தான்.

ஐந்து நிமிடம், பத்து நிமிடம், பிறகு, "லிங்க்!"

தட்டுக் கேட்டு "என்ன சார்?"

"வா! இப்படிப் போகலாம்!"

அந்தி சுருங்கிக்கொண்டிருந்தது.

பிரதேசமோ, கிட்டத்தட்ட வனாந்திரம். மனிதப் பூண்டுகளை எப்பவாவது பார்த்தால் உண்டு.

சிறு கிலேசம் அவன் மனத்தில் குத்திட்டது.

சிங் எதையும் பொருட்படுத்தினவர் அல்ல.

பாதையைவிட்டு இறங்கி செடி கொடி பின்னிய அந்தக் குட்டிக் காட்டுள் பிரவேசித்தார்.

ஒரு தழை வாடை எங்கும் சிலிர்த்தது.

மெள்ள மெள்ள தலைக்கு மேலே கிளைகளை விட்டுக்கொண்டு குட்டிக் குட்டி விருட்சங்களாக வர ஆரம்பித்தன.



சீக்கிரம் அவை ஆகாயத்தை மூடிவிட்டன.

கீழே சிக்கென்று இருள்!

மெள்ள அடி வைத்து நடந்தார்கள்.

சிங் தமது டார்ச்சை எடுத்தார்.

சுளீர் என்று ஒளியை அங்கங்கு பீச்சினார்.

நிச்சந்தையாய் அவர் போவதைப் பார்த்து லிங்க் திடுக்கிட்டான்.

பொறுக்க முடியாமல் "சார்!"

சிங் நின்றார்.

"என்ன?"

"எங்கே போகிறோம்?"

"ஓ! பயம் வந்துட்டுதா?"

"நீங்க இருக்கும்போது ஏது சார் பயம்?"

"அந்த பங்களா பக்கம் நின்னோமே நீ எதையும் கவனிக்கலையா?"

"இல்லை சார்!"

"தெற்கு திசையிலிருந்து ஒரு கழுகு எழுந்து வானத்திலே போச்சு!"

"கவனிக்கலை!"

"அடுத்த ரெண்டு நிமிடத்தில் இன்னும் இரண்டு மேற்காலே போச்சு!"

"எஸ் சார்!"

"இப்போ அதுங்க புறப்பட்ட இடத்தைத் தேடிப் போறோம்! பங்களாவுக்கு தென்மேற்கே நூறு கெஜத்துக்குள்ளே இருக்கணும்!"

"திசை பார்த்துப் போறீங்களா?"

"ஆமாம்! என் ரிஸ்ட்வாட்ச்லே திசைகாட்டியும் இருக்கு..."

"புரியுது சார்!"

சிங் திரும்பினார். மேலே செல்லத் தொடங்கினார்.

மேலும் இரண்டு சங்கடமான நிமிடங்கள் சென்றிருப்பார்கள்.

சட்டென்று பிரேக் போட்டார் சிங்!

எதையோ உணர்ந்தவர் போல் மூக்கைத் தூக்கி நாலா பக்கத்திலும் முகர ஆரம்பித்தார்.

"தெரியுதா லிங்க்?"

லிங்க் இழைத்துக்கொண்டு அவர் அருகே போனான்.

இப்போது அந்த வீச்சம் புரிந்தது. ஏதோ அழுகிய துர்நாற்றம்.

மேலே நடந்தார்.

லிங்க்கின் ஆர்வம் ஏறியது.

அடுத்த ஒவ்வொரு விநாடியும் நாற்றம் அதிகமாகியது.

## காத்திருக்க வேண்டுமா?



தீபாவளிக்கு பத்து படங்கள் வெளிவரப் போகின்றன என்று சினிமா வட்டாரத்தில் பரபரப்பாக பேசி வந்தார்கள். ஆனால் தீபாவளிக்கு வெளிவந்தது என்னவோ ஆறு படங்கள்தான். அந்த ஆறு படங்களில் எது முன்னணி என்று சொல்லமுடியாத நிலை நிலவி வருகிறது. 'தேசியகீதம்', 'புதுமைப் பித்தன்', 'சிம்மராசி', 'என் உயிர் நீதானே', 'உன்னுடன்', 'வீரம் வெளஞ்ச மண்ணு' என்று வரிசைப்படுத்தி பார்த்தாலும் நிலமை சாதகமாகவில்லை.

தீபாவளிப் படங்களைவிட தீபாவளிக்கு முன்பு வெளிவந்த 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்', 'சொல்லாமலே' போன்ற படங்கள்தான் இப்போது அதிக ரன் எடுத்து ஓடிக்கொண்டிருக்கின்றன. தீபாவளிக்கு ரஜினிகாந்த், கமலஹாசன் படங்கள் வெளிவராதது கூட திரைஉலக தொய்விற்கு ஒரு காரணமாககூட இருக்கலாம் என்று ஒரு பிரபல இயக்குநர் கூறினார். மொத்தத்தில் தமிழ் திரைஉலகுக்கு இது ஒரு பலவீனமான காலகட்டம் என்று சொல்லலாம். இந்த நிலை பொங்கலுக்காவது மாறுமா... இல்லை தமிழ்ப் புத்தாண்டு வரை காத்திருக்க வேண்டுமா என்று தெரியவில்லை!

---

திடீரென்று அந்த சின்ன இடைவெளி தெரிய,

சிங்கின் வெளிச்ச ஸ்தம்பம் நேராக ஏதோ பெரிய பொருள் மீது படிந்து நின்றது.

"என் ஊகம் சரியாக இருக்குதானால், அது காந்தனாக இருக்கணும்!"

நெருங்கினார்கள்.

கர்ச்சிப்பை எடுத்து நாசியை மூடினார்கள்.

இப்போது ஒளித்தம்பம் துழாவியது.

அழுகிய மனித உடல் அது.

முகம் இருந்த இடம் வெறும் களறி.

உடை அப்படியே இருந்தது.

அங்கங்கே அதைக் கழுகுகள் கொத்திக் கிழித்திருந்தன.

"உடை இன்னும் முக்காலும் மூடியிருக்கு! இல்லாட்டி இப்போ இங்கே நாற்றம் தாங்காது!"

சடலத்தின் மேலே டார்ச்சு துழாவியது. பிறகு பக்கவாட்டங்களைத் துழாவியது.

பின்னர் மீண்டும் சடலத்தை பகுதி பகுதியாகத் துழாவி வர—



## 27

அன்புள்ள திரு தாசரி அவர்களுக்கு,

வணக்கம்.

தாங்கள் சொல்படி மார்வாடியிடம் முப்பது லட்சம் செலுத்தி கமலப் பதக்கத்தை பெற்றுக்கொண்டேன்!

அதை பத்திரமாகப் போற்றி வந்தேன்.

ஆனால் சமீபத்தில் அதை ஒரு தேர்ச்சி மிகுந்த நண்பரிடம் காட்ட நேர்ந்தது.

அந்தப் பதக்கம் போலிப் பதக்கம், அதிலுள்ள கற்கள் எல்லாம் இமிடேஷன் வைரங்கள் என்று கூறுகிறார்.

மற்றொரு தேர்ந்தவரிடம் காண்பித்துவிட்டேன்.

அவரும் அதையேதான் சொல்கிறார்.

நான் உடனே மார்வாடியைச் சந்தித்தேன்.

அவரைக் கேட்டதில் தாங்கள்தான் அந்த கமலப் பதக்கத்தை கொடுத்து என்னிடம் கொடுக்கச் சொன்னதாகச் சொல்கிறார்.

தாங்கள் சொன்னது உண்மைதானா? அல்லது மார்வாடி பொய் சொல்கிறாரா?

அவனை மிரட்டிக் கேட்டுவிட்டேன். ஆயிரம் முறை சத்தியம் சொல்கிறான்.

தாங்கள் தயவுசெய்து விளக்க வேண்டும்.

இப்படிக்கு,
தாங்கள் உண்மை ஊழியன்
நாராயணன்.

சிங் கடிதத்தை லிங்க்கிடம் நீட்டினார்.

அவன் முடிப்பதற்காக காத்திருந்தார்.

"என்ன தெரியுது லிங்க்?"

"எனக்கு கொஞ்சம் மீந்த புத்தி! நீங்கதான் சொல்லணும்!"

"ரொம்பத் தாழ்த்திக்காதே! இப்போ திருமணத்தூர் கமலப் பதக்கம் கொள்ளை போயிடுச்சுல்லே?"

"ஆமாம் சார்!"

"அந்தக் கொள்ளை அடிச்சது சூரியின் கோஷ்டி. இந்த கோஷ்டியில் சூரியைத் தவிர நாலு பேர் இருந்தாங்க. சரிதானே?"

"ஆமாம் சார்!"

"இதிலே சூரி ஒருத்தரைக் கொன்னான்! அவனும் அகப்பட்டான். கேஸ் நடந்து ஆயுள் தண்டனை கிடைச்சது! உள்ளே போயிட்டான்!"

"கமலப் பதக்கம் என்ன ஆச்சு சார்?"

"அதைத் தற்காலிகமாக மார்வாடிகிட்டே அடகு வைச்சு நாற்பது லட்சம் வாங்கினாங்க! பங்கு போட்டுக்கிட்டாங்க!"

"சரி சார்!"

"சூரி கோஷ்டியில் நாலு பேர்! தசரதன், கோபால், நட்டு, சீனு. இதிலே ஒவ்வொருத்தனும் பங்குப் பணத்தை வைச்சு ஒவ்வொரு விதத்திலே முன்னேறிட்டாங்க! நிறைய பணம் சம்பாதிச்சுட்டாங்க! ஒவ்வொருத்தனும் பேரை மாற்றி வைச்சுக்கிட்டாங்க!" இதிலே தசரதன்தான் தாசரி! இவன்தான் சூரிக்கு அடுத்தபடி! இவன்தான் ஒரு தந்திரம் பண்ணியிருக்கான்!

"என்ன செஞ்சான்?"

"கமலப் பதக்கம் பழைய கால நகை! கோடிக்கணக்கில் அது விலை போகும். அதை அவனே பறிச்சுக்கிடணும்னு திட்டம் போட்டிருக்கான்!

அதுக்காக ஒரு தந்திரம் பண்ணியிருக்கான்.

மார்வாடியை பயமுறுத்தினானோ அல்லது அவனுக்குப் பெரிய தொகை கொடுத்தானோ, அந்த ஒரிஜினல் கமலப் பதக்கத்தை தாசரியே திரும்பி வாங்கிக்கிட்டான்.

மற்ற சகாக்களுக்கு இது தெரிஞ்சா அவங்க சண்டைக்கு வந்துடு வாங்களே!

அதை எப்படிச் சரிக்கட்ட?

இதுக்காக போலிக் கமலப் பதக்கம் தயாரிச்சு மார்வாடிகிட்டே கொடுத்து வைச்சிருக்கான்! ஒரு பதக்கம் இல்லை! மூணு பதக்கம்!

பிறகு ஒவ்வொரு சகாவையும் அழைச்சு, பதக்கத்தை நீங்க வாங்கிக்குங்க! ஆனா வாங்கின கடன் தொகை முப்பது லட்சத்தை மார்வாடிக்குக் கொடுத்திடு! நீ வாங்கிட்டு போறதிலே மற்றவர்களுக்கு ஆட்சேபனை கிடையாது. காரணம் மூணு கோடிக்குமேல் மதிப்பு, வாய்ந்த பதக்கத்தை அவங்க விற்கிறதுக்குப் பயப்பட்டறாங்கன்னு சொல்லிட்டான்.

இப்படி ஒவ்வொரு சகாகிட்டேயும் ஒவ்வொரு சமயத்தில் சொல்லியிருக்கான். அவர்களும் நாற்பது லட்சத்தைக் கொடுத்துட்டு ஆளுக்கு ஒரு போலிப் பதக்கத்தை வாங்கிட்டுப் போய்ட்டாங்க!

அவனவன் தன்கிட்டேதான் பதக்கம் இருக்குன்னு நினைச்சிட்டு இருந்திருக்கான்.

இதுக்கு வசதியாக அவங்க அவங்க தனித்தனி தொழில்லே போயிட்டாங்க! பழைய கோஷ்டி உடைஞ்சுபோயிடுத்து!

இப்போ சூரி விடுதலையாகி வெளியிலே வந்தானா?

அவன் அந்தப் பதக்கத்தை கேட்டா என்ன செய்யறது? அவன்கிட்டே போலிப் பதக்கத்தை கொடுத்து ஏமாத்த முடியாது. கண்டுபிடிச்சுடுவான்.



இதனாலே, அவனையே நேரிலே போய் தாசரி கொன்னுட்டான்! தலைவன் ஒழிஞ்சான்!

அடுத்து நாராயணனுக்கு (பழைய நட்டுவின் பெயர்) தன்கிட்டே இருக்கிறது போலி பதக்கம்னு எதேச்சையாத் தெரிய வந்திருக்கு!

அவன் உடனே தாசரிக்கு இந்தக் கடிதம் எழுதிப்புட்டான்.

தாசரி என்ன செஞ்சான்? நாராயணனையும் கொன்றான். அவன் வேலைக்காரன் காந்தனையும் கொன்றான்.

இப்போ கோபாலும் சீனுவும் பாக்கி.

இவர்களையும் தீர்த்துக்கட்டிடுவான்னு நினைக்கிறேன்.

இந்த ரெண்டு பேருமே இப்போ எங்கே– என்ன பேரிலே இருக்காங்கன்னு தெரியாது.

தெரிஞ்சா அவர்களை எச்சரிக்கலாம்."

"சார்!" என்று குறுக்கிட்டான் லிங்க்!

"இப்போ இந்த தாசரியையே பிடிச்சு உள்ளே போட்டுட்டா என்ன? அதுதானே சுலப வழி?"

"இல்லை! நீ தாசரியை கண்டுபிடிக்க முடியாது!"

"ஏன்?"

"அவன் பெரிய ஆள்! பெரிய எஸ்டேட், பங்களா, கார் இதெல்லாம் வைச்சுக்கிட்டு அட்டகாசமாக இருக்கான். இதெல்லாம் என் ஊகந்தான். பொது வாழ்க்கைக்கு வர மிகவும் கஷ்டப்படுவான்! அவன் இப்போ ஒரு சூப்பர் மனிதன் ஆயிருக்கணும்! யாரும் லேசிலே கண்டு பிடிக்க அவன் விரும்பமாட்டான்.

லிங்க் சிறிது நேரம் அவர் சொன்னதில் லயித்துப் போனான்.

உண்மையில் சிங் ஒரு அரிய புத்திசாலிதான்!

"சார்... நீங்க சொன்னதுதான் 100 சதவீதம் நடந்திருக்கணும்!"

"நடந்தா சரி! நடக்காட்டாலும் சரி! இப்போ வரதாச்சாரிக்கு வாக்கு கொடுத்தாச்சு! ஒரிஜினல் கமல பதக்கத்தை அவருக்குத் திருப்பிக் கொடுத்தாகணும். அதுவரை அந்த தாசரியை நாம் பிடிச்சாகணும்!"

"சார்! ஒரு விஷயம்?"

"என்ன?"

"நான் இந்த அண்டர் வொல்ட் ஆசாமிகளை தேடி 'பார்' ரெஸ்ட்டாரண்டெல்லாம் அலைஞ்சேன் பாருங்க, அப்போ 'ரெட் ஹில்ஸ்' என்கிற ரெஸ்ட்டாரண்டில் வினோத்தைப் பார்த்தேன்."

"யார் அந்த தனியார் துப்பறியும் ஆசாமியா?"

"ஆமாம் சார்! கெட்டிக்காரன்! பலமுறை எனக்கு உதவி பண்ணியிருக்கான்! நான் உதவி செய்திருக்கேன்! நாம்ப கவர்மெண்ட் டிபார்ட்மெண்டை சேர்ந்தவங்க. அதனாலே அவனைவிட சில விசயத்திலே அதிக சக்திவாய்ந்தவர்களாக இருப்போம். ஆனா அதே மாதிரி அவங்க தங்கள் தனிப்பட்ட ஹோதாவில் துப்பறியறதனாலே,

நம்மை மாதிரி அரசாங்க கட்டுப்பாடுகளுக்கு உட்படாம இருப்பாங்க! அதுவே அவங்களுக்கு அனுகூலமா இருக்கும்!

இந்த 'பார்'லே சந்திச்ச பிறகு, ஒருமுறைத் தனியா சந்திச்சேன்.

அப்போ அவன் அந்த மோசமான 'பார்'க்கு ஏன் வந்தான்னு கேட்டேன்.

எனக்கு ஒரு கேஸ் வந்திருக்கு! அதை உனக்கும் சொல்றதுக்கு இல்லை. காரணம் நீ அரசாங்கத்தைச் சேர்ந்தவன். எனக்குக் கிடைச்சிருக்கிற க்ளையண்ட் உங்க அரசாங்கச் சட்டப் பிரகாரம் ஒரு குற்றவாளின்னு சொன்னான்."

"ஓ!" என்று நீட்டமாகக் கூறினார் சிங்!

"ஒருவேளை இந்த நாராயணன் அந்த வினோத்தை அனுகியிருப் பானோ!"

"இருக்கும், இருக்கும்! அல்லது மற்ற இரண்டு பேர்லே யாராவது அனுகியிருக்கலாம்!"

"நானும் அப்படித்தான் சார் நினைக்கிறேன்!"

சிங் யோசித்தார்!

"ஏன் விங்க்! வினோத்கிட்டே கேட்டா சொல்லமாட்டானா?"

"சார்! க்ளையண்ட் இரகசியத்தைக் காப்பாற்றணும்னு ஒரு தர்மம் இருக்கு இல்லையா?"

"ரைட்! அதுக்கு எந்தத் தீங்கும் இல்லாமத்தான் நான் சொல்றேன்! சும்மா கேட்க வேண்டாம்! நமக்குத் தெரிஞ்ச விசயம் முழுவதையும் சொல்லிடுவோம்! அவன் தனக்குத் தெரிந்ததை சொல்லட்டும்!"

"முயற்சிக்கிறேன் சார்!"

"சரி! காந்தன் சடலத்தை எடுத்திட்டு போய்ட்டாங்களா இல்லையா?"

"எடுத்திட்டாங்க சார்! இன்னும் ரெண்டு மூணு நாளிலே ரிப்போர்ட் வந்துடும் சார்!"

## 28

திகைத்தான் வினோத்!

"விங்க்! நீ ரொம்ப தாரியமா உங்க இரகசியத்தைச் சொல்லிட்டே! ஆனா அதே துணிச்சல் எனக்கு வருமா?" என்றான்.

"அப்புறம்?"

நடந்தவைகளைக் கூறினான் வினோத்.

எல்லாவற்றையும் உன்னிப்பாக கேட்டான்.



"இந்தா வினோத்! முதல் விசயம் தெரிஞ்சுக்க! உங்க நவீன் வைச்சிருக்கும் கமலப் பதக்கம் உண்மையா இருக்காது! போலி!"

"ஓ! அவருக்கு அதிர்ச்சியா இருக்கும்!"

"ரெண்டாவது— அந்த ரெட்ஹில்ஸ்'பார்' சொந்தக்காரன் தாசரின்னு சொன்னே? நிச்சயமா அவன் அந்த கிரிமினல் தாசரி இல்லை!"

"அப்போ யாரு?"

"இவங்களை ஏமாத்தறதுக்காக ஒரு டியூப்ளிக்கேட்டைத் தன் பெயரிலேயே உலாவ விட்டிருக்கான். இப்படிச் செய்யறது மூலம் போலியோ, வேறே யாருமோ தாசரி பேரிலே சந்தேகம் 'வைச்சுக்கக் கூடாது. கண்ணியமான ஆசாமின்னு நினைக்கணும்னு அவன் திட்டம்!"

பார் சொந்தக்காரன் தாசரியோ, அல்லது அந்த நிகிலா சொன்ன முகவரியில் இருக்கிற தாசரியோ உண்மைத் தாசரி இல்லை.

"ஒரே ஒரு கேள்வி வினோத்! நான் சொன்ன விசயத்தில் ஏதாவது உனக்கு உதவியா இருக்குமா இல்லையா?"

"நிறைய உதவப் போவது."

"அப்போ நீ எனக்குப் பதில் உபகாரம் செய்யலாம்!"

"நீ போலீஸ் இலாகா. விங்க் உன்னை நம்பப்படாது! நாளைக்கு நம்ப கிளையண்ட் இருக்கிற இடம் தெரிஞ்சா அவனைப் போய் அரெஸ்ட் பண்ணிடுவே!"

"சாமி சத்தியமா உனக்கு வாக்கு கொடுக்கறேன்! அதைச் செய்யவே மாட்டேன்!"

வினோத் யோசித்தான்.

"ரைட்! விங்க் நான் சொல்றேன். என் க்ளையண்ட் பெயர் நவீன்!"

"நவீனா?"

"ஆமாம்! அவர் அந்த சூரியுடைய பழைய சகா! பழைய பெயர் கோபால்! இப்போ நவீன் என்கிற பெயர்ல பழைய கும்பல் யாருக்கும் தெரியாம இருந்து வரார்! ஆனா சூரி ஜெயில்லேர்ந்து வந்தவுடனே அவரைக் கண்டுபிடிச்சுட்டான்!"

"நாங்க விசாரிச்சது மட்டுமில்லாமல் அந்த டியூப்ளிகேட் தாசரியை 24 மணி நேரமும் பின்பற்றிக்கிட்டே இருந்தோம். ஒரு வாரம் இதைச் செய்தோம். ஆள் ஒரு தப்புத் தண்டாவுக்குப் போகாமல் இருந்துட்டான்! நிச்சயம் உண்மைத் தாசரி ஒரு வாரம் முழுக்க ஒரு கெட்ட பழக்கமும் இல்லாமல் இருக்க முடியாது..." என்றான் விங்க்.

"ரைட்! நவீனுக்கும் அதுதான் சந்தேகம்! அவன் செகரட்டரி ரீடா கொடுத்த அட்ரஸை நானே சோதிச்சேன்! உங்களுக்கு வந்த சந்தேகந்தான் எங்களுக்கும் வந்திச்சு!"

"சரி! வினோத்! இப்போ நடந்தது எல்லாம் போகட்டும்! இப்போ ஒரிஜினல் தாசரியைப் பிடிக்கணும்! அவன்கிட்டேயிருந்து ஒரிஜினல் கமலப் பதக்கத்தையும் பிடுங்கிடணும்!"



"அதுக்கு வழி என்ன?"

"சிங் ஒரு திட்டம் போட்டிருக்கார்!"

"என்ன?"

"அதாவது இந்த தாசரிக்கு இப்போ பழம் நகை மேலே ஆசை வந்தாச்சு!"

"சரி!"

"ஹைதராபாத் நைஜாம் நகையில் ஒரு பங்கை எக்ஸிபிஷன் வைக்கப் போறோம்னு சொல்லி குறிப்பிட்ட சாலையில் ஒரு தனி வீட்டிலே வைப்போம்!"

"சரி!"

"நிச்சயம் அது இந்த தாசரி கையில் போய்ச் சேரும்! அவன் நிச்சயம் இந்த நகைகளைக் கொள்ளை அடிக்க ஏதாவது திட்டம் போடுவான்! அதே மாதிரி போலி நகைகளைச் செஞ்சு உள்ளே வைச்சு, நல்ல நகைகளை எடுத்துட்டுப் போனாலும் போகலாம். அந்த சமயத்தில் நூறு சதவீதம் எச்சரிக்கையாக இருந்து அவனை பிடிச்சாகணும்னு திட்டம்!"

"ரைட்! விங்க்! இது எங்களுக்கும் உதவும்! தாசரியைப் பிடிச்சாச்சுன்னா என் க்ளைண்ட் பேரில் அவன் நடத்தற பிளாக்மெயில் நின்னுபோகும் இல்லையா?"

"ரைட் மிஸ்டர் வினோத்! உங்களுக்கு மிக்க நன்றி!"

"விங்க்! ஒரே ஒரு விஷயம்!"

"என்ன?"

"எங்க க்ளைண்ட் நவீன் மார்வாடிகிட்டேயிருந்து நாற்பது லட்சம் பணம் கொடுத்து பதக்கத்தை வாங்கி வைச்சிருக்கார்! அது போலி தானா?"

"நிச்சயம் போலிதான்! பதக்கத்தை வாங்கிக்கொள்ளும்படி அவன் எந்தவிதத்திலாவது தூண்டிவிட்டிருப்பான்! இந்த சகாக்கள் மூணு பேரையுமே ஏமாத்திட்டான்.

## 29

சிங் அந்த நகை எக்ஸிபிஷன் நடத்த எத்தனையோ இடையூறுகள் வந்தன.

எல்லாவற்றையும் சமாளித்துவிட்டார் அவர்.

அவர் கண்ணாடிப் பெட்டிக்குள் காட்சிக்கு வைத்த நகை எல்லாம் இமிடேஷன் நகைகள்தான்.

எனவே நகைகள் களவு போனாலும் கவலைப்பட வேண்டாம்.

என்றாலும், ஏடாகூடமாக மற்றவர் ஏளனம் செய்யும்படி ஏதாவது நடந்துவிடக் கூடாதே என்பது அவர் கவலை.

அது சாலை என்றாலும் தெரு போல் குறுகியதுதான்.

இதில் அங்கங்கே சில இடங்களில் சாதாரண உடை போலீசாரை நிறுத்தி வைத்திருந்தார்.

அவர்களுக்கு வேண்டிய ஆயுதங்களும் இரகசிய முறையில் கொடுக்கப்பட்டு இருந்தன.

அவர்களது ஒரே நோக்கம் தாசரி அந்தச் சாலைக்குள் வந்துவிட்டால் அவனை ஒரு கோழியைப் போல் பொத்திவிட வேண்டும்.

மொத்தம் ஐந்து நாட்கள் எக்ஸிபிஷன். அதில் மூன்று நாட்கள் ஓடிவிட்டன.

நான்காம் நாள்தான் பாக்கி!

அன்று சிங் தலைமையில் போலீசார் அதிகக் கண்காணிப்பில் இருந்தார்கள்.

"தாசரி வந்தால் அவர் காரின் டிரைவராக அவனது காரியதரிசிப் பெண்தான் வருவாள்! தாசரியை அடையாளம் கண்டுபிடிக்க அது ஒரு முக்கிய வழி!" என்று சிங் தமது பரிவாரங்களுக்குக் கூறியிருந்தார்.

ஏனெனில் தாசரி எந்த வேடத்திலும் வரலாம். அதுதான் ஒரு சங்கடம்!

தாசரியின் கார் மட்டும் அந்தச் சாலைக்குள் நுழைந்துவிட்டது தெரிந்தால், அதை ரோட் ப்ளாக்குகள் வைத்து எப்படி சிறையாக்குவது என்பது பற்றி எல்லாம் சிங் திட்டம் போட்டிருந்தார்.

இவை தவிர பலவித உபாயங்களுக்கு ஏற்ப அவர் மாற்றுத் திட்டம் போட்டு வைத்திருந்தாலும்,

எந்த நிமிடத்தில் என்ன நடக்குமோ என்ற ஒரு கவலை அவரிடம் நிச்சயமாக இருந்தது.

காலை நேரம் ஓடிவிட்டது!

இனி எக்ஸிபிஷன் முடிய சில மணி நேரங்கள்தான் பாக்கி!

ஒருவேளை பொறி வைக்கப்பட்டிருப்பது தெரிந்து தாசரி வராமல் இருக்கிறாரோ...

மாலை மூன்று மணிக்கு அந்தத் தெருவில் ஒன்றன்பின் ஒன்றாக மூன்று கார்கள் புகுந்தன.

ஒரு காரின் கண்ணாடி சன்னல்கள் எல்லாம் மூடப்பட்டிருந்தன.

ஒரு கார் எக்ஸிபிஷன் கட்டிடத்திற்கு பல அடிகள் முன்னால் நின்றுவிட்டது!

அதில் உள்ளவர்கள் இறங்கி பக்கத்து வீட்டுக் காம்பவுண்டுள் போவது தெரிந்தது.

அவர்களைப் பார்த்தால் ஒரு குடும்பத்தினர் என்று தோன்றும்படி



இருந்தது.

ஆனால், அவர்கள் அந்தக் காம்பவுண்டுக்குள் மறைந்திருக்க மாட்டார்கள்.

காரில் சட்டென்று புகை கிளம்பியது!

என்ன நடக்கிறது என்று யோசிப்பதற்குள் தீ அந்தக் காரை மூடிவிட்டது.

இதில் தீயைவிட அடர்த்தியான புகைப்படலங்கள் தோன்றி அந்தப் பிரதேசம் முழுவதையும் பரவிவிட்டன.

காட்சியைக் கண்டு வெகுண்ட சிங்,

தமது வொயர்லெஸ்ஸில் செய்தி அனுப்பினார்.

"உடனே எக்ஸிபிஷன் வாயிலைக் கவனி! ஆட்களைப் பிடி!"

எஸ் சார் எஸ் சார்! என்றும் எங்கும பதில் குரல்கள்.

ஆனால் கார் கிளப்பிவிட்ட புகை அந்தத் தெருவில் பூரண சூரிய கிரகணத்தைக் கொண்டுவந்துவிட்டது.

இருட்டு மட்டுமல்ல, புகை எங்கும் மிகையாகப் பரவி ஒருத்தரை ஒருத்தர் பார்ப்பதைக்கூடக் கஷ்டமாக்கிவிட்டது.

தடாங் என்று கட்டட வாசலில் ஒரு வெடிக்கும் சத்தம்!

அதே நேரம் எக்ஸிபிஷன் உள்ளே கண்ணாடிப் பெட்டிகள் உடையும் சத்தம்.

சிங் குறித்துக்கொண்டு அந்த கட்டிட வாயிலுள் தாவி,

"பிடியுங்க! பிடியுங்க!" என்று கத்தினார்.

அதைத் தொடர்ந்து ஆட்கள் அங்குமிங்கும் அவசரத்தில் ஓடும் சத்தம்.

அவரவர் வெவ்வேறு திசைகளுக்கு ஓடினார்கள்.

சிங் புகையைப் பொருட்படுத்தாது கட்டடத்துள் நுழைந்தார்.

எதிரே வரும் ஒவ்வொருத்தரையும் நிறுத்தி நிறுத்தி யார் என்று பார்த்தார்.

ஆனால் அதேநேரம் சற்றுத் தள்ளி ஒரு நிழலாக ஒரு மனிதன் போர்டிகோவிலிருந்து குதித்து ஓடுவதை அவர் இனம் கண்டு கொண்டார்.

"பிடி அவனை!" என்று அவர் பறக்க,

யார் மீதோ அவர் மோத,

அடுத்து எழுந்த குழப்பத்தில் அந்த நிழல் ஆசாமி ஓடிவிட்டது தெரிந்தது.

அவ்வளவுதான்! தாசரியைக் கோட்டை விட்டோம் என்று சிங்குக்குத் தோன்றியது.

பாய்ந்து சாலைக்கு அவர் ஓடினார்.

தமக்கு வகுத்துக்கொண்ட இடது முனையில் நின்றுகொண்டு

தெருவைவிட்டுப் போகிறவர்களை நிறுத்தி நிறுத்தி விசாரித்து விட்டுத்தான் அனுப்ப ஆரம்பித்தார்.

இதேபோல் தெருவின் மறுமுனையில் இருக்கும் லிங்குக்கும் அவர் ரேடியோச் செய்தி அனுப்பினார்.

அடுத்த அரை மணி நேரம் குழப்பங்கள்தான்!

ஆனால் அதேநேரம்–

தெருவின் இரு முனைகளும் சீல் வைத்தது போல் மூடப்பட்டு விட்டன.

இதற்குள் உச்சநிலையில் எரிந்த கார் இப்போது தனது ஜுவாலை யையும், புகையையும் குறைக்க ஆரம்பித்தது.

தெருவின் இருள் குறைந்து தெளிவு பிறக்க ஆரம்பித்தது.

சிங்குக்கு ஒரே பதட்ட நிலை!

தாம் கோட்டை விட்டுவிட்டோம் என்று கவலை!

ஆனால் தாசரி தப்பிப் போயிருப்பான் என்று அவர் கருதினாலும், அந்தப் பெண் காரியதரிசி இன்னும் அவர்களது கண்காணிப்பு வேலையைக் கடந்து போயிருக்க முடியாது என்று தீர்மானமாக நினைத்தார்.

எனவே தெருவைவிட்டுப் போகும் பெண்களை அதிகமாகக் கண்காணிப்பதுடன், மற்றவர்களையும் அதுபோல் கண்காணிப்பு செய்யும்படி செய்திகள் விடுத்தார்.

தெரு இதற்குள் அல்லோலப்பட்டது.

மாலை நேரம் ஆகிவிட்டபடியால், நிறைய மக்களின் சந்தடிகள் எங்கும் கிளம்பின.

தெருவின் இருமுனைகளிலும் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்படு கிறார்கள் என்று தெரிந்ததும் ஜனங்கள் போலீசை அவதூறுகளோடு திட்ட ஆரம்பித்தார்கள்.

பெண்களை ஒன்றிரண்டு கேள்விகள் கேட்டுத் திருப்தி அடைந்து தெருமுனைக் காப்பாளர்கள், அவர்களை வெளியே போக அனுமதி கொடுக்க ஆரம்பித்தார்கள்.

கூடை எடுத்துச் செல்லும் வேலைக்காரிகள், குழந்தை எடுத்துப் போகும் தாய்மார்கள் என்று உண்மையானவர்களை சிங் விட்டுக்கொண்டிருந்தார்.

சட்டென்று அவர் கவனம் அந்த குழந்தை வண்டியைத் தள்ளிக்கொண்டு போகும் பெண் மீது விழுந்தது.

அரைக் கணம் திகைத்தாலும் அடுத்த அரைக் கணத்தில் தாவிப்போய் பெண்ணை மறித்தார்.

"உங்க பெயர்?"

"ரத்னா!"



"உங்க வீட்டு நம்பர்?"

"நான் அடுத்த தெருக்காரி. இங்கே 88–ஆம் நம்பருக்கு வந்துவிட்டுப் போறேன். விழிவிடுங்க!"

யந்திரத்தனமாக சிங் வழிவிட்டார்.

ஆனால் அந்தப் பெண்ணின் முகம் அவர் மனதில் பெரிய குறுகுறுப்பை ஏற்படுத்திவிட்டது.

அனுமதி அளித்த அந்தப் பெண்ணை நோக்கி ஓடினார். "ரசிகா" என்று இரைந்தார். அந்தப் பெண் நின்றுவிட்டாள்.

அந்தப் பெண் கூப்பாடு போட்டுத் தடுப்பதற்குள் அந்தக் குழந்தை வண்டியை மூடியிருக்கும் போர்வையை நீக்கி உள்ளே பார்த்தார்.

உள்ளே குழந்தை இல்லை.

சட்டென்று அவள் கையைப் பிடித்தார் சிங்!

அவள் திமிறினாள்.

"நீங்கள் தாசரியின் காரியதரிசி ரசிகா! நான் கூப்பிட்டதும் நீ நின்றாய் என்று எனக்குத் தெரியும் என்று பலாத்காரத்தோடு அவள் கையைப் பற்றினார் சிங்!

அடுத்த அரை மணியில் அந்தப் பெண் காரை ஓட்டிப் போக, அதற்குள் சிங்கும் அவரது திறமைவாய்ந்த இரு பிரதம சீடர்களும் சென்றார்கள். சிங் சொல்வதற்கு அந்தப் பெண் கீழ்ப்படியத் தொடங்கி விட்டாள்.

அந்தக் காரைப் பின்பற்றி தூரத்தில் போலீஸ் வேன்கள் வந்து கொண்டிருந்தன.

அடுத்த முப்பது நிமிடத்திற்குள் தாசரியைப் பிடித்துவிட்டார் அவர்.

"நான் பிடிபட்டிருக்க மாட்டேன். இருந்தாலும் மனிதனுக்கு பணம், பதவி, பெண் இவை ஏதாவது ஒன்றில் உள்ள ஆசைதான் அவனைக் கவிழச் செய்கிறது. நானும் அதனால்தான் பிடிபட்டேன்!" என்றார், தாசரி!

(முடிந்தது)

ராணி பப்ளிகேசன் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: அ.மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. அச்சிட்டவர்: ர. பாஸ்கரன், சிண்டிகேட் ஆர்ட் பிரஸ், 1091 பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.